
சிதம்பரம்
நகரத்தார் சங்கம்



துவக்கவிழா மலர்

1-12-86

சிதம்பரம்

நகரத்தார் சங்கம்



துவக்கவிழா மலர்

1 – 12 – 1986

30-1

உ
சிவமயம்

சிதம்பரம் நகரத்தார் சங்கம்

35, தேரடிப்பிள்ளையார் கோவில் தெரு,

சிதம்பரம் - 608001

''ஒற்றுமை, உழைப்பு, உயர்வு''

1986 - 87 ஆம் ஆண்டிற்கான

நிர்வாகக்குழு

தலைவர்:

பேராசிரியர் வீர. முத்துவீரப்பன் B.E. M.S. (Cornell)

துணைத்தலைவர்:

பழ. மீனாட்சிசுந்தரம்

செயலாளர்:

அரு. இராமநாதன் B.E., M.Sc.

துணைச்செயலாளர்:

முரு. நாராயணன் M.A., B.T.

பொருளாளர்:

கும. அண்ணாமலை B.E., M.Sc.,

செயற்குழு:

வெ. நாராயணன் M.A., B.T.,
பேராசிரியர் அரு. இலக்குவன் B.Sc., (Ag) D.H.M.S. (Tenn)
டாக்டர் அண. ஆண்டியப்பன்
ச. மெய்யப்பன் M.A.,
தேவ. அருணாசலம் M.A., M.Tech.
மா. பூங்குன்றன் M.Sc., M.Phil.,
டாக்டர் இராம. சிதம்பரம்
வ. காசிநாதன்
சா. மு. சாத்தப்பன்
இராம. மெய்யப்பன் B.Com.,
பழ. காசிவிசுவநாதன்
நா. உமையாள் M.A., B.Ed.,
நா. விசாலாட்சி M.A., B.L.,
கும. இராமநாதன்
இராம. கனகசபை B.com.,

மலர் வெளியீட்டுக்குழு

ச. மெய்யப்பன் எம்.ஏ.
டாக்டர் அண. ஆண்டியப்பன்
பழ. மீனாட்சிசுந்தரம்
வெ. நாராயணன் எம்.ஏ., பி.டி.,
முரு. நாராயணன் எம்.ஏ., பி.டி.,
அரு. இராமநாதன் பி.இ., எம் எஸ்சி ,
இராம. மெய்யப்பன் பி.காம்.,
மா. பூங்குன்றன் எம்.எஸ்சி , எம் பில்.,
டாக்டர் இராம சிதம்பரம்

30-

உ
சிவமயம்

முன்னுரை

இறைவன் திருவருளால், சிலரின் சீரிய நன்முயற்சியின் பயனாக. 'கோயில்' என சிறப்பித்துக் கூறப்படும் ஆகாயத்தலமான சிதம்பரத்தில் 18—9—1986 வியாழக்கிழமை நகரத்தார் பெருமக்கள் இராமசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் கூடி ''சிதம்பரம் நகரத்தார் சங்கம்'' என்ற அமைப்பை ஏற்படுத்தி, 1986-'87 ஆம் ஆண்டிற்கான நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். உறுப்பினர்களைச் சேர்த்து, கூடிய விரைவில் முறைப்படி துவக்கவிழா நடத்துவது என அவ்வமயம் முடிவு செய்யப் பெற்றது. கூட்டத்தில் சங்கத்தின் நோக்கங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

நகரத்தார் சங்கங்கள் கல்வி, திருமணம், வேலைவாய்ப்பு, மற்றும் சமூக வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து உதவ வேண்டியது இன்றியமையாதது. ஒற்றுமை உணர்வினை வளர்த்து, நாம் உழைத்து உயர்வுற வழிவகுக்க வேண்டுமென்ற கருத்துக்களை நினைவுறுத்துமாறு ''ஒற்றுமை, உழைப்பு, உயர்வு'' என்னும் தாரக மந்திரத்தைத் தமது குறிக்கோளாகக் கொண்டுள்ளது சிதம்பரம் நகரத்தார் சங்கம். சிதம்பரத்தில் பல்வேறு பொதுப்பணிகளை செவ்வனே ஆற்றி வருகின்ற, சிதம்பரம் நகரத்தோடு நெருங்கிய நீண்டநாள் தொடர்புடைய செட்டிநாட்டரசர் குடும்பத்தைச் சேர்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ எம். இராமசாமி செட்டியார் அவர்கள் 1—12—86 அட்சய ஸ்ரீ கார்த்திகை மீ 15உ திங்கட்கிழமை சிதம்பரம் நகரத்தார் சங்கத்தைத் துவக்கி வைத்து நல்லாசி வழங்குவது பெருமகிழ்ச்சிக்குரியது. 'துவக்கவிழா மலரினை அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் வெளியிடுவது சாலப் பொருத்தமாக அமைந்துள்ளது.

மலர்வெளியீட்டுக் குழு உறுப்பினர்களும், சங்கத்தின் ஏனைய உறுப்பினர்களும் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் பயனாக துவக்க விழா மலர் சீரிய முறையில் அமையப் பெற்றுள்ளது.

மலருக்கு வாழ்த்துரை வழங்கிய மதிப்பிற்குரிய தவத்திரு கோவிலூர் மகா சன்னிதானம் காசிவிசுவநாத ஞானதேசிக சுவாமிகள், தத்புருஷ தேசிகர் பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம் இராமசாமி செட்டியார், முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், மதுரைமீனாட்சி சுந்தரேசர் திருக்கோயில் தக்கார் வ. நா. சிதம்பரம் செட்டியார், மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் செட்டியார், தொழில் அதிபர் ஏ.எம்.எம். அருணாசலம் செட்டியார் ஆகிய சான்றோருக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

மலர் வெளியீட்டுக் குழுவின் வேண்டுகோளை ஏற்று கட்டுரை நல்கி மலருக்கு மணம் சேர்த்த அறிஞர் பெருமக்கட்கு நன்றி.

சிதம்பரம் நகரத்தார் சங்க செயற்குழுவின் சீரிய முயற்சியால் வணிக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, விளம்பரங்கள் பெருமளவில் பெறப்பட்டன என்பதை நன்றியுடன் குறிப்பிடுகிறோம்.

மலரில் விளம்பரங்கள் தந்த வணிகப் பெருமக்களின் வாணிபம் இறையருளால் தழைத்தோங்க எங்கள் நல்வாழ்த்துக்களும், வாணிப நிறுவனத்தாருக்கு நன்றியும் உரித்தாகுக.

இம்மலரை குறுகிய காலத்தில் அழகுற அமைத்துக் கொடுத்த மீனாக்ஷி அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

சிதம்பரம் நகரத்தார் சங்க உறுப்பினர்கள் அனைவரின் நல்லெண்ணத்தாலும், ஒத்துழைப்பாலும் பல பெரியவர்களின் ஆசியுடன் வெளிவரும் இம்மலர் அனைவருக்கும் பயனளிக்க வேண்டுமென விழைகிறோம்.

இவண்,

மலர் வெளியீட்டுக்குழு

தவத்திரு. காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள்
ஆதீன கர்த்தர், கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்.

வாழ்த்து

"அம்பிகையின் அருட்குமரா ஆனைமுகத்தவனே
ஞானம் அளித்தென்னை நற்பணிகள் செய்ய வைப்பாய்
ஆதிசக்தி அம்மையவள் அருளாசி தன்னால்
அன்பர்களின் நற்பணிகள் அமோகமாய் கூட்டிவைப்பாய்"

திருநெல்லைத்தாய் உடனுறை கொற்றவாளீசர் திருவருளால்
'சிதம்பரம் நகரத்தார் சங்கம்' சீரும் சிறப்புமாய்
திருத்தொண்டு செய்து சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

தத்புருஷ தேசிகர் பாலகவி வயிநாகரம்
வே. இராமநாதன் செட்டியார்

பாலருவாயர் நிலையம்
சம்பந்தர் தெரு, தேவகோட்டை

24—10—86

வாழ்த்து

தில்லைத் திருத்தலத்தில் சேவைக் குறிக்கோளில்
செல்வத் தனவணிகர் சேர்ந்தமைத்த-முல்லை
நகரத்தார் சங்கம் நயந்தபணி செய்து
சிகரத்தே வாழ்க சிறந்து.

நலமே தழைக!

Dr. M. A. M. Ramaswamy, B.A., D.Litt.

CHETTINAD HOUSE,
RAJAH ANNAMALAIPURAM,
MADRAS-600 028.

26.11.86.

<u>வாழ்த்துச் செய்தி.</u>

சிதம்பரம் நகரத்தார் சங்கம் விரைவில் துவங்க இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

ஆர்வமும் திறமை நிறைந்த நிர்வாகக் குழுவினர்களின் முயற்சி வெற்றி பெற்று சிதம்பரம் நகரத்தார் சங்கம் சிறப்புடன் இயங்கும் என்பதில் ஐயப்பாடில்லை. துவக்கவிழா மலர் வெளியிடும் செய்தி மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.

சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கத்துடன் இணைந்து நகரத்தார் நலனுக்காக சிறப்புடன் சேவை செய்ய என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

மு. அ. மு. இராமசாமி.

A. M. M. ARUNACHALAM

"TIAMHOUSE"
28, RAJAJI ROAD
MADRAS-600 001

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் சங்கத்துவக்க விழா பற்றிய கடிதம் கிடைக்கப் பெற்ருேம்,

நகரத்துச் சங்கங்களுள் தாய் சங்கமான சென்னை நகரத்தார் சங்கத்தைத் தொடர்ந்து உண்டான சங்கங்களுள் ஒன்ருன தங்கள் சங்கம் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரிடையே நல்லதோர் ஒற்றுமையையும், தொடர்பையும் வளர்த்து நகரத்தார்களுக்கு சிறப்புடன் பணியாற்றவும் சங்கம் மேன்மேலும் வளரவும், இவ்விழா சிறப்புடன் நடைபெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள,

அ. மு. மு. அருணசலம்

சிதம்பரம் நகரத்தார் சங்கத்திற்கு
வாழ்த்து

(பேராசிரியர், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்)

சிதம்பரம், நகரத்தார் சங்கம், நமது பாராட்டுக்களுக்கு உரிய பேராசிரியர், திரு. வீர. முத்துவீரப்பன் அவர்கள் தலைமையில் தகுதி நிறைந்த செயற்குழுவுடன் அமைந் திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது.

நகரத்தார் பெருமக்கள், "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதனை உளங்கொண்டு, பல்வேறு தொழில் துறைகளில் தாம் ஈட்டிய பொருளில், ஒரு நல்ல அளவு பகுதியைப் பல வகை அறங்களுக்கும் தொன்றுதொட்டு வழங்கிவருகின்ற வள்ளல்கள். இந்திய நாட்டிலும் வெளிநாட்டிலும் நகரத்தார்கள் செய்துள்ள தெய்வத்திருப்பணிகள் பற்பல வாகும்.

இவ்வாறு, நகரத்தார்கள், தம் பொருள்களைப் பெரும்பாலும் தெய்வத்திருப்பணிகளுக்கு வழங்கி வந்த நிலையில், தெய்வத் திருப்பணியுடன் கல்விப் பணியையும் வளர்த்தல் இன்றி யமையாதது என்பதனை உணர்ந்த அரசர் அண்ணாமலை வள்ளல் அவர்கள், தம் பெரும் பொருளை வாரி வழங்கித் தனி ஒருவராய், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினை நிறுவி, நகரத்தார்கள் பலர், கல்விப் பணிகள் செய்ய வழிகாட்டிய பெருமை கொண்டார்கள். அவர்களும், அவர்கள் குமாரர் அரசர் முத்தையவேள் அவர்களும், அவர்கள் குமாரர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இப்போதைய இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களும் அண்ணாமலை நகரிலும், சென்னைமாநகரிலும், வேறு பல இடங்களிலும் தெய்வப் பணிகளையும், கல்விப் பணிகளையும், பிற பல பொதுநலப் பணிகளையும் நிறுவியும் வளர்த்தும் வருகின்ற பாங்கினை நாடு போற்றிப் பயன் பெற்று வருகின்றது. குறிப்பாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னைத்தமிழ் இசைச் சங்கம், மதுரைத் தமிழ் இசைச் சங்கம், ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பர் திருக்கோயில் முதலிய பேரறங்களை ஒருநாளும் மறக்கமுடியாது. ஐயப்பர் திருக்கோயிலை அழகு நிறைய உருவாக்கி முதற் புகழ் கொண்ட டாக்டர் இராமசாமி அவர்கள், தம் தந்தையார் அவர்களின் விருப்பம் நிறைவேறும் வகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக்கல்லூரியினை நிறுவி வளர்த்துவருவது, மிகப் பெரிய சாதனையாகும்.

அண்ணாமலை அரசர் வழியில், டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களும், கலைத்தந்தை கரு. முத்து. தியாகராசச் செட்டியார் அவர்களும், மற்றும் நகரத்தார் பெருமக்கள் பலரும் ஆற்றியுள்ள கல்விப் பணிகளும், பிற பொது நலப் பணிகளும் நகரத்தார் மரபினருக்கு மேலும் மேலும் புகழ்சேர்ப்பனவாகும். டாக்டர் அழகப்பர் நிறுவிய கல்வி நிறுவனங்களை, அண்மையில், பல்கலைக் கழகமாக உயர்த்தியுள்ள தமிழக அரசை நாம் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு, அறங்களையும் வளர்த்துத்தாமும் வளர்ந்து வந்த நகரத்தார் பெருமக்களுக்கு வெளிநாட்டு வாணிகம், குன்றியும் இன்றியும் போனது காரணமாகப் பலருடைய செல்வவளம் குறையத் தொடங்கிய நிலையில், மேற்குறிப்பிட்டவாறு, நகரத்தார் கள் நிறுவியுள்ள பல்வேறு நிறுவனங்களாலும், நகரத்தார்கள் ஒருவருக்கொருவர் தனியாகச் செய்துவரும் உதவிகளாலும் உயர்கல்விப்பட்டங்களும், பதவிகளும், தொழில்துறை உதவி களும் பெற்று வருகின்ற நகரத்தார்கள் பலராவர். செட்டிநாட்டு அரசர் குடும்பத்தினரின் பேரருளால், வேலை வாய்ப்புக்கள் பெற்றும், பொறியியல் துறை, வேளாண்மைத்துறை முதலியதுறைகளில் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில், கிடைத்தற்கரிய இடங்கள் பெற்றுக் கல்வி பயின்றும் பெரு வாழ்வு வாழ்கின்ற நகரத்தார் மரபினர் பலரை நாம் காண்கின்றோம்.

நகரத்தார்கள் நம் மரபினரின் தேவைகளை அறிந்து கொள்ளவும், அவை நிறைவேற உரியமுயற்சிகள் செய்யவும் ஆங்காங்கு நகரத்தார் சங்கங்கள் தோன்றி ஒற்றுமையாகச் செயலாற்றுவது நல்ல பயன் தரும். இத்தகைய நகரத்தார் சங்கங்கள் ஒருங்கிணையும் முறையில், அரசர் முத்தைய செட்டியார் அவர்கள், சென்னையில், நகரத்தார் ஐக்கிய சங்கத்தினை நிறுவி, நகரத்தார் மரபினருக்குப் பல நன்மைகள் செய்து வந்தார்கள். அவர்கள் அமரர் ஆன பின், நம் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள், இச்சங்கத்திற்குத் தலைவராகவும், திரு. மு சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள், திரு வ. செ. சிவலிங்கம் செட்டியார் அவர்கள் திரு. சு. ராம. பழ, சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் ஆகியமூவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்று, ஐக்கிய சங்கம், இனிது நடைபெற்று வருகின்றது. டாக்டர் இராமசாமி அவர்கள், நகரத்தார் மாணவர்கள் கல்வி பயில்வதற்கு உதவி செய்ய ஆண்டுதோறும் ஐயாயிரம் ரூபாய், இச்சங்கத்திற்குத் தம் தந்தையார் அவர்கள் வழங்கி வந்த நன்கொடையைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன், மேலும் இதற்காக ஐம்பதினாயிரம் ரூபாய் வழங்கி, இரண்டு அறக்கட்டளைகளையும் நிறுவியுள்ளார்கள். மேலும் டாக்டர் இராமசாமி அவர்கள், மேல் நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் முதல் மதிப்பு எண் பெற்ற நகரத்தார் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் அவர்கள், கல்லூரி மேற்படிப்பு முடிக்கும் வரை, அதற்கு ஆகும் எல்லாச் செலவுகளையும் வழங்க உடன்பட்டிருப்பது, அவர்களது அருளின் பயனாகும். இவை அல்லாமல், இவர்கள், பிற பல துறைகளில் வழங்கி வருகின்ற அருட்கொடைகளும் பலவாம்.

இத்தகைய கொடையரசர் டாக்டர் இராமசாமி அவர்கள் இந்திய ஹாக்கி விளையாட்டுச்சங்கத்தின் தலைவராக, இரண்டாம் முறை தேர்ந்தெடுக்கப் பெற்றிருப்பதுடன், அண்மையில், ஆசிய ஹாக்கி விளையாட்டுச்சங்கத்தின் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருப்பது, நமக்குப் பெருமை தருவதாகும். இப்பெருந்தகையாளர், சிதம்பரம் நகரத்தார் சங்கத்திற்குப் புரவலராக இருந்து இதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வர வேண்டுமென்றும் அவர்களை வேண்டிக்கொள்வோம்.

நகரத்தார்கள், வாணிபம், கல்வி, அரசியல் முதலிய எந்தத்துறையில் தொடர்பு கொண்டாலும் திறமையாகவும், உயர்வாகவும் செயலாற்ற வல்லவர்கள். எடுத்துக்காட்டாக, அரசர் முத்தையா அவர்கள், சென்னை மாநில அமைச்சராக இருமுறை இருந்து பெரும் பணியாற்றியதையும், மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள், இந்திய அரசின் இணை அமைச்சராக இப்போது இருந்து அரும்பணியாற்றிவருவதையும் இந்த நல்ல நேரத்தில் நினைவு கூர்ந்து மகிழ் வெய்துவோம்.

சிதம்பரம் நகரத்தார் சங்கம் ஊருணி நீர் நிறைந்தாற்போல், பலருக்குப் பயன் தந்து நின்று நிலைத்து வளர்ச்சிபெறத் தில்லைப் பெருமான் திருவருளை வேண்டுகிறேன்.

20—11—86 **லெ. ப. கரு. இராமநாதன்**

வி. என். சிதம்பரம்
தக்கார்
அருள்மிகு மீனாக்ஷி சுந்தரேசுவரர் திருக்கோயில்
மதுரை.

20-10-86

வாழ்த்து

அன்புடையீர்,

சிதம்பரத்தில் நகரத்தார் சங்கம் அமைக்கப்பெற்றுள்ளது கண்டு மிக்க மகிழ்ச்சி.

சிதம்பரம் நகரத்தார் சங்கம் அருகுபோல் வேரோடி ஆல் போல் தழைத்து நற்செழிப்புடன் வளர்ச்சி பெற்று பன்னெடுங் காலம் நம் சிறப்பு மிக்க நகரத்தார் சமூகத்திற்கு நற் தொண்டுகள் பல புரிய அன்னை மீனாட்சி அருள் பாலிப்பாளாக.

அன்புள்ள,

வி.என். சிதம்பரம்

டாக்டர். வ. சுப. மாணிக்கம்
எம் ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி., டி.லிட்.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி உயர்ஆராய்ச்சி மையம்
முன்னை துணைவேந்தர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

கதிரகம்
காரைக்குடி-623002
தொலைபேசி 2328

15—11—1986

வாழ்த்து

சங்கத்துப்பயன்

நகரத்தார் சங்கங்கள் தமிழகத்தில் பல நகரங்களிலும் ஊர்களிலும் உள. இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் உள. பொதுவாக எல்லாச்சங்கங்களும் இனநலத்துக்கும் பொது நலத்துக்கும் நன்கொடையாலும் உழைப்பாலும் தொண்டாற்றி வருகின்றன. குறிப்பாக நகரத்தார் ஏழைப் பெண்களின் திருமணங்கட்கும் இளைஞர் இளைஞியர் மேற் படிப்புக்கும் உதவி செய்து வருகின்றன.

பல்வேறு வீழ்ச்சிக்கும் தொல்லைக்கும் பின் இன்று நம் இனம் பரந்து முன்னேறி இருப்பதற்குக் காரணம் நம்இளையதலை முறையின் கல்வி வளர்ச்சியேயாகும். செல்வக் குடும்பத்து இளைஞர்களைக் காட்டிலும் வறுமைக் குடும்பத்து இளைஞர்கள் உயர்ந்த கல்வி கற்று நாடெங்கும் உலகெங்கும் தொழில் செய்து வருகின்றனர். நம்மினத்துப் பெண்களின் கல்வி முன்னேற்றம் கூடுதலாகி வருகின்றது. முதன்மை பெறும் நகரமகளிர் பலர். பெண்பிறந்தது பற்றிக் கவலைப்படாமல் நம் இனத்தார் பெண் மக்களை மிகவும் உயர்படிப்புப் படிக்க வைக்க வேண்டும். திருமணத்தை எண்ணிப் பெண் கல்வியைக் குறைத்துவிடக் கூடாது. எத்துணை வறுமையிலும் கடன் பட்டும் நம் இனத்து மகளிர் உயர் பரப்புக் கல்விக்கு முழு முதன்மை கொடுக்க வேண்டும். இதுவே நகரத்தாரின் எதிர்கால வாழ்வுக்குச் சிறந்த வழியாகும்.

நம் இன வளத்துக்கும் செழிப்புக்கும் நான் இன்று கூறும் அறிவுரை பெண் ஆண் எல்லாரும் உயர்கல்வி கற்கவேண்டும் என்பதே. கல்வி யுயர எல்லாம் உயரும்.

புதுப்பெருமை பேசுவோம்


வ.சுப. மாணிக்கம்

மலரினுள்

"எவ்வாறு அழைக்க? நீயே சொல் அம்மா"

தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள்

அம்மா! உன்னைத் திருநெல்லை என்றழைக்கவா?
தியான வல்லி என்றழைக்கவா?
தியாக சொரூபி என்றழைக்கவா?
நான் எவ்வாறழைக்கவென்று நீயே சொல்லம்மா.
திவ்ய மங்கள ரூபி என்றழைக்கவா?
திருமந்திர சொரூபி என்றழைக்கவா?
திருவம்பலத் தாயே என்றழைக்கவா?
நான் எவ்வாறழைக்கவென்று நீயே சொல்லம்மா
திருவாய் மொழியாள் என்றழைக்கவா?
திரிசடையே என்றழைக்கவா?
திருநெறித்தாயே என்றழைக்கவா?
நான் எவ்வாறழைக்கவென்று நீயே சொல்லம்மா
அமுத சொரூபி என்றழைக்கவா? - என்னை
அனைத்துக்காக்க வந்த ஆத்தாவென்றழைக்கவா?
ஆதிசொரூபி என்றழைக்கவா?
நான் எவ்வாறழைக்கவென்று நீயே சொல்லம்மா!



"பாப்பாவுக்கு"

தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிக சுவாமிகள்

கடமை என்பதடி பாப்பா நாம் கண்ணுயிருப்பதடி பாப்பா
நாம் கண்ணுயிருப்பதடி பாப்பா கருணை வடிவமடி பாப்பா
தனிமை என்பதடி பாப்பா தலைவனை நினைக்கவடி பாப்பா
தன்னை அறிந்தவன் பாப்பா தலைவனை அறிவானடி பாப்பா
உள்ளத்தின் உறைவிடம் பாப்பா உண்மையின் பிறப்பிடம் பாப்பா
அன்பான நெஞ்சமடி பாப்பா அது அருளான ஆலயமாம் பாப்பா
நீதியைப் புரிந்துநட பாப்பா நம்மை நிம்மதி நாடிவரும் பாப்பா
வளமான வாழ்வுக்கடி பாப்பா வாழ்வைப் புரிந்துநட பாப்பா
நல்வாழ்வு கூறியதும் பாப்பா வாழ்ந்து காட்டு நீ பாப்பா

காடு வெட்டிப் போட்டு கடிய நிலந்திருத்தி
வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா! இலக்குமியே
என்றைக்கும் நீங்காதிரு

— பாடுவார் முத்தப்பசெட்டியார்

வாழ்வாங்கு வாழ்ந்த குலமே!

அமரர் கவியரசர் கண்ணதாசன்

சிந்துவெளிப் புகழ்காத்து
சீர்காத்து திறம்காத்து
தென்னாடு வந்த குலமே

திருவுடைய சோழனவன்
செம்மாண் புகார் நகரில்
திருக்கோவில் கொண்ட குலமே

வந்தவழி மறவாது
வாய்மை நெறி தவறாது
வாழ்வாங்கு வாழ்ந்த குலமே

வாணிபமும் மதநெறியும்
வளர்ந்தோங்கி நாள்தோறும்
வளமாக நின்றகுலமே

எந்தமிழ் நாடெங்கும்
இறைபணியே பெரிதென்று
எந்நாளும் செய்த குலமே

என்னுடைய குலமென்பேன்
எல்லாமும் நீயறிவாய்
ஏற்றுக்கொள் தமிழர் நிலமே

காவிரியின் பெருமாட்டி
கவின்மதுரை நகர்தன்னைக்
கயல்சூழ வைத்த கதையும்

கண்ணகிஎன் றால் இந்த
மண்ணெல்லாம் அடிபணிய
கற்போடு வாழ்ந்த நிலையும்

நாவசையும் போதெல்லாம்
நாடசையும் படிநின்ற
நல்வளையா பதியின் கதையும்

நாடியவர்ப் பணியாது
மணிமே கலை என்ற
நன் மங்கை வாழ்ந்த கதையும்

காவியங்கள் ஐந்தினிலும்
மூன்றிலே தலைதூக்கிக்
காட்டுவதும் எங்கள் குலமே

கடுகளவுதான் சொன்னேன்
மலையளவு புகழுண்டு
காண்பாய்நீ தமிழர் நிலமே

கடலோடி மலைநாடும்
பிறநாடும் சென்றார்கள்
கப்பல் வராத போதே

காற்றினிலே பாய்போட்டு
கடவுளையே துணைவைத்து
கலங்களெலாம் சென்றபோதே

நடமாடும் சிவமாக
திருநீறும் சந்தனமும்
நதிபோலப் பூசும் உடலே

'நமசிவாயம்' என்று
நாள்தோறும் சொல்லுமவர்
நயமான சிவந்த இதழே

தடம்பார்த்து நடைபோடும்
தனிப்பண்பு மாறாத
தகைமிக்க தெங்கள் குலமே

தந்தகரம் அவராகப்
பெற்றவளும் நீதானே
சாட்சிசொல் தமிழர் நிலமே

ஆறாயிரம் பேர்கள்
கற்கின்ற கழகத்தை
அண்ணாமலை நாட்டினான்

அவனோடு போட்டியிட
அத்தனையும் தான்தந்து
அழகப்பன் முடிசூட்டி னான்

ஓராயிரம் தடவை
செட்டிமகன் நானென்று
உலகெங்கும் மார்தட்டினான்

உளநூலும் விஞ்ஞான
மருத்துவமும் கற்றவர்கள்
உண்டென்று பேர் காட்டினான்

சேராத செல்வத்தைச்
சேர்த்தாலும் நல்லவழி
செலவாகும் எங்கள் குலமே

செந்திருவை சரஸ்வதியை
கேட்டேனும் உண்மைநிலை
தெரிந்துகொள் தமிழர்நிலமே

சாதிவெறி கொண்டேன்போல்
கவிதையிதை எழுதினேன்
தவறல்ல; உண்மை சொன்னேன்

தர்மத்தைப் பாடுவது
சாதிவெறி யாகாது
தமிழுக்கே நன்மை என்பேன்

ஓதியொரு மொழி சொன்ன
ஒக்கூர்மா சாத்தியுமென்
உன்னதப் பாட்டி யாவாள்

உயர்ந்த சீத் தலைச்சாத்தன்
ஒருவகையில் வணிகனென்
உத்தமப் பாட்டனாவான்

ஆதிமுதல் தமிழிலே
அவர்வந்த வழியிலே
அடியேனைப் பெற்ற குலமே

அளவிலே சிறிதேனும்
செயலிலே பெரிதாக
அறிவாய்நீ தமிழர் நிலமே!

உ
சிவமயம்

நாட்டுகோட்டை நகரத்தார் வரலாறு ★

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அனைவரும் ஒருங்கு கூடிப் பெருகி வாழும் இடம் செட்டிநாடு. இன்றையப்புதுக்கோட்டை, பசும்பொன் முத்து ராமலிங்கம் ஆகிய இரு மாவட்டங்களிலும் செட்டிநாட்டுப் பகுதிகள் அடங்கியுள்ளன.

நகரத்தார்கள் பல்வேறு இனத்தாருடன் பல்வேறு இடங்களில் பலர் ஆட்சியின் கீழ் வாழ்ந்தாலும் அவர்களிடையே இன அடிப்படையான ஒற்றுமையும் கட்டுக் கோப்பும் இருந்தன. தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் கூட்டம், ஏழு கோயில் பிரிவு போன்றவை இந்தக் கூட்டுறவைச் சிதையாது காத்தது. கூட்டமாக வணிகம் செய்த குழுமனப் பான்மை அவர்களிடை என்றும் இருந்தது. அதனால் அவர்கள் தாங்கள் வாழுதற்குரிய நிலஎல்லையை

''வெள்ளா றதுவடக்காம்
மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வைகை
தெற்காகும்—ஒள்ளியநீர்
எட்டிக் கடற்கிழக்காதமீன்றோ நாட்டரண்சேர்

செட்டி நாட்டெல்கை எனச் செப்பு''
என்று வரையறுத்துக் கொண்டனர்.

பெயர்களும் விளக்கமும்:

இவர்கள் தங்களை நாட்டுக்கோட்டை நகரத்தார் என்றும் தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் என்றும் ஏழு கோயில் நகரத்தார் என்றும் தனவணிகர் என்றும் தன வைசியர் என்றும் இரத்தினதன மகுடவைசியர் என்றும் செட்டிப்பிள்ளைகள் என்றும் நாநாதேசிகள் என்றும் நாட்டரசன்கோட்டைச் செட்டியார்கள் என்றும் பல்வேறு பெயர்களால் சொல்லியும் எழுதியும் வருகின்றனர்.

சோழநாட்டை சார்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் இம்மரபினர் அனைவரும் ஒன்றாகக் கோட்டை கட்டி வாழ்ந்தனர். அம்மரபுதழுவி, இவர்கள் 'நாட்டுக்கோட்டையார்' எனப் பெற்றனர்,

தனம் என்பது செல்வமாகும்; இது வடமொழிச்சொல். தனத்தைவைத்து வட்டிக்குக் கொடுத்து வாங்கியதால் இவர்கள் தன வணிகர் என்றும் தனவைசியர் என்றும் பெயருடையராயினர். செட்டிநாட்டில் தொண்ணூற்றாறு ஊர்களில் வாழ்ந்தமையான் தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் என்றும் ஏழு கோயில்களின் உரிமைபெற்று வாழ்ந்தமையான் ஏழு கோயில் நகரத்தார் என்றும் இவர்களைச் சொல்லுவது மரபு.

இரத்தின வாணிகம் செய்தமையானும் முடிசூடுகின்ற உரிமை இவர்களுக்கு இருந்தமையானும் இவர்கள் தங்களை 'இரத்தின தன மகுட வைசியர்' என்றனர்.

எந்த இடங்களில் தாங்கள் வாழ விரும்பினாலும் அங்கு பல வளங்களை உண்டாக்கி மாடமாளிகைகள் ஓங்கிய நகரமாகச் செய்யும் தன்மையால் 'நகரத்தார்' எனப் பெயர் பெற்றனர்.

'செட்டி' என்ற சொல்லைத்தான் நகரத்தார்கள் தங்கள் பெயருக்குப் பின்னே சேர்த்துக் கொள்கின்றனர். பிற்காலத்தில்,செட்டி என்பது மரியாதைக்குறைவாகப் பிற இனத்தாரால் பயன்படுத்தப்படவே 'ஆர்' விகுதியையும் இணைத்துச் 'செட்டியார்' என்று வழங்கினர். 'செட்டு' என்ற சொல் தான் 'இ'கர விகுதி பெற்றுச் செட்டி ஆயிற்று.

பல்வேறு நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்தமையால் இவர்கள் தங்களை 'நாநாதேசிகள்' என்பர். இவ்வண்ணம் பல்வேறு பெயர்களால் இம்மரபினர் அழைக்கப் பெற்றாலும், இவர்கள் பெயர்களுடன் பின்னொட்டாக அமைவது 'செட்டி' என்ற சொல்லேயாகும்.

நகரத்தார்களைப் பற்றியும் அவர்கள் வரலாற்றைப் பற்றியும் எழுதியவர்கள், பூபாலதன வைசியர் என்றும் பிரதான வைசியர் என்றும் உபயகுல பூபால வைசியர் என்றும், சந்திர கங்காகுல வைசியர் என்றும் சிவ கோத்திர வைசியர் என்றும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களைப் பெயரிட்டு அழைத்தனர். இவ்வாறு நகரத்தார்களுக்கு உரிய பெயர்கள் மிகப்பல.

காஞ்சியில் பல்லவராட்சி வேரூன்றிய காலத்தில் காஞ்சியில் வாழ்ந்தனர். பல்லவர் வலிகுன்றிச் சோழர் வலிபெற்றமையால், இவர்களின் வாணிக மையம் காஞ்சியிலிருந்து காவிரிப்பூம் பட்டினமாக மாறியது. இதற்குக் கடல் வாணிகமும் காரணமாகலாம்.

நகரத்தார்களின் முதல் வாழ்விடம் இளையாத்தக்குடி. பிரான் மலையிலுள்ள கல்வெட்டொன்று '**ஐம்பொழில் வளநாட்டு** கல்வாயல் நாட்டு சுந்தரபாண்டியபுரத்து நகரத்தார்'' என்று காணப்படுகிறது. எனவே இளையாத்தக்குடிப் பகுதியில் ஐம்பொழில் என்ற ஒரு வாணிப மையத்தில் இம்மரபினர் வாழ்ந்தனர் என்று கருதவேண்டும்.

காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம் என்ற வரிசையில் காவிரிப்பூம்பட்டினம் நகரத்தார்களின் வாழ்விட மாகத் திகழ்கிறது சிலப்பதிகாரம் காவிரிப்பூம் பட்டினத்தில் நகரத்தார் வாழ்ந்தமையைத் தெளிவாக்கும் கோவலன் கண்ணகியர் நகரத்தார் மரபைச் சார்ந்தவர் என்பது தமிழ் அறிஞர்கள் ஒப்புக் கொண்ட உண்மை.

செட்டிநாட்டில் வாழ்ந்த பல புலவர்கள் தங்கள் நூல்களில் நகரத்தார் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து இப்பகுதிக்குக் குடிபெயர்ந்தவர்கள் என்று பாடியுள்ளனர். பாடுவார் முத்தப்ப செட்டியார் திருமுக விலாசத்தில்

> ''பார்த்திபர் காவிரிப்பூம் பட்டினத்தில் முன்வைசியர் கோத்திரத்தில் மிக்க குபேரனைப் போல்''

என்று பழைய வரலாற்றைச் சொல்லிப் பாடுகின்றார்.

நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இன்று வாழும் பகுதிக்கு வந்தமைக்கு என்ன காரணம்? கம்பனடிப்பொடி அவர்கள் இதற்கான காரணங்களைக் கீழ்க்கண்டவாறு முறைப்படுத்தித்தருகிறார்.

1 நகரத்தார் கொடைச் சிறப்பால் ஏற்பட்ட பொறாமை

2 இவர்கள் செல்வ வளத்தால் எழுந்த பொறாமை

3 இவர்கள் அறிவாற்றலால் தோன்றிய பொறாமை. (இவற்றையெல்லாம் ஒன்றுக்கி நகரத்தாரிடம் மன்னனுக்கு ஏற்பட்ட பொறாமை என ஒன்றாகச் சொல்லலாம்)

4 நகரத்தார் பெண்ணை உலாப் போந்த மன்னன் முத்தமிட அதனால் விளைந்த பகை.

நகரத்தார் சொல்லும் கதையில் இந்நான்கு கூறுகளும் அவ்விருவர் பாலும் இருந்தன என்று உணரலாம்.

வேலங்குடிக் கல்வெட்டு என அச்சிடப் பட்டுள்ள நூலில் இவ் வரலாறு இடம் பெற்றிருக்கிறது. அன்றிப் பாண்டிய நாட்டில் நற்குடிகளும் வைசியர்களும் இன்மையால் சவுந்தரபாண்டியன் சோழ மன்னனை நாடி நகரத்தார்களை அழைத்து வந்தான். இவ்வாறு நல்ல குடிமக்கள் இல்லாத போது நாடு விட்டு நாடு சென்று மக்களை அழைத்தல் வரலாற்றில் கண்ட உண்மை.

பாடுவார் முத்தப்ப செட்டியாரும் முத்துக் குட்டிப் புலவரும் பாண்டிய மன்னன் சோழ நாடு போய் நகரத்தாரை அழைத்து வந்தான் என்பர்.

> ''பார்த்திபர் காவிரிப்பூம் பட்டினத்தில் வைசியர் கோத்திரத்தில் குபேரனைப் போல்— வீற்றிருக்கும் அந்நாளில் பாண்டி நகர்க்கான குடி வேண்டுமென்று தென்னாடர் தேசிகர் பால் சென்றுரைத்து—முன்னான மெத்த உப சாரம் வேண்டுவதெல்லாமுரைத்துச் சித்தம் திரும்புதற்குச் செய்தி சொல்லிச்—சத்தியமாய்த் திங்கள் கதிர் உள்ள மட்டும் தேசிகரே எந் நாட்டில் உங்கள் மரபுக்கொருகாலும்—பங்கம் வர ஒட்டேன் ......

(திருமுகவிலாசம்: 183-187)

கண்ணுடையம்மன் பள் பாடிய முத்துக் குட்டிப் புலவர்,

'சென்று நற்குடி மாறனழைக்கச்
சிறந்த காவிரிப் பூம்பட்டணத்தில்
அன்றிருந்து பொற்றே ரேறிவந்தோர்
அருவியூர் சுந்தரம் தன்னிளசை
யென்று மூன்றிலிசை யைஞ்ஞூற்றுவாழ்
எழுமா நகர்வாழு வணிகர்
நன்றிசேர் கண்ணுடையாளைப் போற்றும்
நகர மெங்கள் நகரங்காணாண்டே''.

என்று அப்பள்ளில் இவ்வரலாற்றைக் குறிப்பர். வாய் மொழிக்கதை, சோழ மன்னனை நாடிப் பாண்டியன் அழைத்தான் எனத் தெரிவிக்கிறது. பாடுவார் ஆசானை நாடி அழைத்து வந்தான் எனக் கூறுகிறார். ஏழுநகரத்தார் குளுவ நாடகத்திலும் இக்கருத்துக்கள் இடம் பெற்று உள்ளன.

புலவர்கள் நகரத்தார் இடம் பெயர்ந்தமையை விளக்கினாலும் மக்களிடையே வழங்கும் கதை பெண்ணுடன் தொடர்பு படுத்தித்தான் பேசுகிறது.

''நகரத்தார்களின் மரபுகளைப் பற்றியும் 1318 ஆம் ஆண்டு பாண்டியக் கல்வெட்டு ஒன்று சில செய்திகளைத்தருகின்றது. அதில் காவிரியின் இரு கரையிலும் இருந்த பதினெண் பூமி வணிகநகரத்தார்களின் பிரசஸ்தி அல்லது மெய்க்கீர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதினெண் பூமி வணிக நகரத்தார் சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வந்து குடியேறினர் என்று தெரிவிக்கின்றது''.

காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர்களுக்கும் அரசுக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டில் பல வணிகக் குழுக்கள் வெளியேறின. அத்தகையவர்களில் நகரத்தார்களும் ஒரு சாரார் என்று கருதலாம்.


நகரத்தார் வரலாறு பற்றிய வேலங்குடிக் கல்வெட்டு, நகரத்தார் வரலாற்றையோ இடப் பெயர்ச்சியையோ சொல்லவில்லை. அக்கல் வெட்டு வேலங்குடி இறைவற்கு வாணிப நகரத்தார் செய்த கொடையையே உரைக்கிறது.

நகரத்தார் வரலாற்றில் தொடர்புடைய பூவந்திச் சோழன், ராசபூஷண சோழன் என்ற பெயர்கள் வரலாற்றில் இல்லை. இவற்றுக்கு ஒப்பான பெயர்களும் இல்லை. இவை இன்னும் ஆராய்தற்கு உரியன.

★ நன்றி: நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு

டாக்டர் தே. சொக்கலிங்கம்
எம்,ஏ., பி. ஒ. எல்., பி யெச்டி.





ஸ்ரீ காசி விசுவேசர்க்கு, நகரத்தார் பெருமக்களால் செய்விக்கப்பெறும்
அர்த்தசாம பூசையின் அலங்காரம்

The famous Arthasama ARTI service conducted by the Nattukkottai Chettiars
in the Viswanath Temple at VARANASI

विश्वनाथ के मंदिर में नाटटुक्कोट्ट चेट्टियारों द्वारा प्रसिद्ध अंतिम पूजा आरती

நகரத்தார் கோயில் விளக்கம்

நகரத்தார்கள் திருமணங்களில் இசைவு பிடிமானம் எழுதும்போது, சில தொடர்களைத் தொன்று தொட்டுப்பயன்படுத்துகின்றனர், அவை ஒவ்வொரு கோயிலுக்கும் வெவ்வேறாக அமைந்தவை.

இளையாத்தக்குடிக் கோவிலைச்சார்ந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், கல் வாசனாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில்' என்று எழுதிப் பின் தம் பிரிவைக் குறிப்பர். இளையாத்தக்குடி, கல் வாசல் நாட்டைச்சார்ந்தது.

கல்வாச நாட்டைச்சேர்ந்த இளையாத்தக்குடிக்கு மற்றொரு பெயர் 'குலசேகரபுரம்'. பாண்டிய நாட்டிலுள்ள குலசேகரபுரம் என்ற பெயர், பாண்டிய மன்னருடன் தொடர்புடைய தாகவே இருக்க வேண்டும். பாண்டியர் வரலாற்றில் குலசேகர பாண்டியன், வீர பாண்டியன் என்ற பெயருடைய மன்னர்கள் இருந்தனர். நகரத்தார்களாகிய வணிகர்கள் இவர்களின் ஆதரவைப் பெற்றுக் குலசேகர புரம் என்றும் வீரபாண்டியபுரம் என்றும் தாம் வாழ்ந்த பகுதியைப் பிரித்துக்கொண்டிருக்க வேண்டும். அன்றி நாடாள்வோரே நாட்டின் பகுதிகளைப் பிரித்து இவ்வாறு பெயரும் சூட்டியிருக்கலாம். குலசேகரபுரம் என்பது இளையாத்தக்குடியே

குலசேகரபுரம்	சூடாமணிபுரம்	வீரபாண்டியபுரம்	தேசிகநாராயண புரம்
1 இளையாத்தக் குடி (அ) பிள்ளையார் பட்டி (அ) இரணியூர் 2 நேமம்	இலுப்பைக்குடி	1 மாற்றூர் 2 வயிரவன் கோயில்	வேலங்குடி சூரக்குடி

வீரபாண்டியபுரம் என்பது ஏழகப் பெருந் தெருவாகிய வயிரவன்பட்டி. இங்குள்ள சிவன் கோயில் வயிரவர் சிறப்பால், [வீரபாண்டிய புரம் என்ற பெயர் மறைந்து] வயிரவன்பட்டி என அழைக்கப்பெறுகிறது.

இளையாத்தக்குடி, நேமம் இரண்டும் குல சேகரன் பெயருடைய பகுதியிலும், மாற்றூர், வயிரவன் கோயில் இரண்டும் வீரபாண்டியன் பெயருடைய பகுதியிலும் இருந்தன.

இலுப்பைக்குடி, மாத்தூருக்கு அருகி லிருந்தும் வீரபாண்டியபுரத்தில் கட்டுப்படாது தனி உரிமை பெற்றுப் புகழிடங் கொடுத்த பட்டணமாகச் சூடாமணிபுரமாகத்திகழ்ந்தது. சூரக்குடியும் வேலங்குடியும் தேசிக நாராயண புரத்தில் கட்டுப்பட்டவை. எனவே நகரத்தார் கோயில் உள்ள ஊர்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு பெயர்கள். ஒன்று வழக்கில் உள்ளவை; மற்றொன்று நகரத்தார் தொடர் பால் அமைந்தவை.

பேச்சு வழக்கு	நகரத்தார் தொடர்பு
இளையாத்தக்குடி	குலசேகரபுரம்
நேமம்	,,
மாத்தூர்	வீரபாண்டியபுரம்
ஏழகப் பெருந் தெரு	,,
இலுப்பைக்குடி	புகழிடங்கொடுத்தபட்டிணம் (சூடாமணிபுரம்)
சூரைக்குடி	தேசிக நாராயணபுரம்
வேலங்குடி	,,
மருதங்குடி	இராச நாராயணபுரம்
பிள்ளையார்பட்டி	திருவேட்பூர்
இரணியூர்	,,

உட்பிரிவுகள்:

இளையாத்தக்குடி உட்பிரிவில் ஆறு ஊர்ப் பெயர்கள் இருக்கின்றன. அவையாவன: 1. ஒக்கூர் 2. பெருமருதூர் 3. கழனிவாசல் 4. கிங்கிணிக்கூர் 5. பேரசெந்தூர் 6. சிறு சேத்தூர் என்பன. இதிலுள்ள ஒக்கூர், கழனி வாசல் இரண்டும் இன்றும் இப்பெயருடன் உள்ளன. பிறவூர்கள் பற்றி ஏதும் தெரிய வில்லை.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எழுதும் போது 'கல் வாசனாட்டில் இளையாத்தன் குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையார்' என்று எழுதுவர். முதலில் நாடு; பின் கோயி லுள்ள ஊர்; அடுத்து அதற்குள்ள இன்னொரு பெயர்; பின் பிரிவு இந்த அமைப்பு இளை யாத்தக்குடியின் ஏழு பிரிவில் ஆறு பிரிவில் காண முடிகிறது.

இக்கோயில் வரிசையில் இரண்டாவதான 'பட்டினசாமியார்' பிரிவில் மட்டும் ஒரு தொடர் மிகுதியாகக் காணப்படுகிறது. கல்வாசு னாட்டில் இளையாத்தக்குடியான குல சேகர புரத்தில் அரும்பாற்கிளையாரான பட்டணசாமியார்

மாத்தூர்க் கோயில் உட்பிரிவுகளில் உறை யூர், அரும்பாக்கூர், மணலூர், மண்ணூர், கண்ணூர், கருப்பூர், குளத்தூர் என்றுள்ள ஏழு பிரிவுகளிலும் 'ஊர்' என்று உள்ளது. அவை யெல்லாம் ஊர்ப் பெயர்களே. இவற்றில் 'உறையூர்' என்ற ஒரு பெயர் சோழ நாட்டுடன் தொடர்பு படுத்தக் கூடியது. குளத்தூர், கருப்பூர் என்ற பெயர்களால் பல ஊர்கள் தமிழகத்தில் விளங்குகின்றன. இங்குச் சொல்லப்பட்டன எவ்விடத்தின என்பதற்குத் தனிக் குறிப்புகள் கிடைக்கவில்லை.

இசைபிடிமானத்திலோ பிறவற்றிலோ வயிரவன் கோயில் என்று சொல்லும் மரபு கிடையாது. ஏழகப் பெருந்திரு என்பதே வழக்கு; இஃது ஏழகப் பெருந்தெரு என்பதன் மரூஉ. சீரும் சிறப்பும் மிக்க வயிரவமூர்த்தி இக் கோயிலில் விளங்கியமையால் இதனை வயிரவன் கோயில் என்று அழைக்கும் பழக்கம் தோன்றிவிட்டது. வயிரவன் கோயில், கீழ்க் குண்டாற்று நாட்டில் உள்ளது.

சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப்பெற்றது, ஏழக நகர். கி. பி. 1180 இல் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டின் மேல் படை யெடுத்துச் சென்றான். அப்போது வீர பாண்டியன் தன் ஏழகப் படையுடனும் மறவர் படையுடனும் இணைந்து போரிட்டான். பாண்டியன் தோற்று ஓடினான். கி. பி. 1202 இல் குலசேகர பாண்டியன் மூன்றாம் குலோத்துங்கனுடன் திருப்புத்தூருக்கு அருகி லுள்ள மட்டியூரில் ஏழகப் படைகளை வைத்துக் கொண்டு போரிட்டான். இதனால் பாண்டியர் களுக்கும் ஏழகப்பெருந் தெருவிற்கும் நெருக்க மான தொடர்புண்டு எனலாம்.

நாநாதேசி திசையாயிரத்தைந் நூற்றுவர், படைகளைத் தங்கள் காவலுக்கு வைத்திருந் தனர். அப்படைப் பிரிவு ஏழகத்திலிருந்தது. ஏழகம் என்பது கழநிவாசல் என்று திரு கம்பனடிப்பொடி கூறுவர். எனவே மிகுந்த சிறப்புடைய ஏழகப் பெருந்திரு என்ற பிரிவினரே வயிரவன் கோயிலைச் சார்ந்தவர் கள்.

வயிரவன் கோயிலில் சிறுகுளத்தூர், கழனி வாசல், மருகேந்திரபுரம் என்று மூன்று பிரிவு கள் உண்டு. ஆனால் இக்கோயிலில் தான் பிரிவுக்குள் உட்பிரிவு செய்யும் வகுப்பு முறை காணப்படுகிறது. சிறுகுளத்தூர்ப் பிரிவில் பெரிய வகுப்பு. தெய்யனார் வகுப்பு, பிள்ளையார் வகுப்பு என்ற மூன்று வகுப் புள்ளது. நேமம், இலுப்பைக்குடி, சூரைக்குடி. வேலங்குடி ஆகியவற்றில் ஒரே பிரிவுதான், ஆனால் ஒவ்வொன்றுக்கும் பெயருள்ளது. அவை இளநலம், சூடாமணிபுரம், புகழ் வேண்டிய பாக்கம், கழனி நல்லூர் என ஊர்ப் பெயர்களாகவே காணப்படுகின்றன.

தனிவளர்ச்சி:

சில கோயில் பிரிவுகள் தனிக் கோயிலாக வளர்ந்தன.

பிள்ளையார்பட்டி என்ற பெயர் வயிரவன் பட்டி என்பது போல அமைந்தது. இங்குள்ள பிள்ளையாருக்குத் தனி மதிப்பும் பெருமையும் எழுந்த பின் இவ்வூர்ப் பெயர் மறைந்து பிள்ளையார்பட்டி என்ற பெயர் பிறந்தது. பிள்ளையார்பட்டி இளையாத்தக்குடிக் கோயிலி லிருந்து பிரிந்து வளர்ந்தது இக்கோயிலார் 'இரணியூர் மருதங்குடியான இராச நாராயண

புரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட் பூருடையார்' என்று எழுதுவர்.

கல்வாசநாட்டில் இளையாத்தக் குடியான குலசேகர புரத்தில் மருதங்குடியான இரணியூர், என்று எழுதுவது இரணியூருக்கும் இளையாத் தக்குடிக்குமுள்ள மிகுந்த நெருக்கத்தை வெளிப் படுத்துகிறது. மருதங்குடி என்ற பெயர் பிள்ளையார்பட்டிக் குரியது; இரணியூருக்கு இல்லை. இங்கு நகரத்தார்கள் குடியேறிய போது இதனை 'இராச நாராயணபுரம்' என்று பெயரிட்டனர். இரணியூர்க் கோயில் பிள்ளை யார் பட்டியிலிருந்து பிரிந்தமையால் மருதங்குடி யான இரணியூர் என்ற வழக்கு உள்ளது.

இரணியூர், இளையாத்தக்குடிக் கோயிலின் ஒரு பிரிவாக இருந்து தனியே வளர்ந்தது. கல் வாசநாட்டில் இளையாத்தக்குடியான குல சேகர புரத்தில், இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட் பூருடையார் என்று இவர்கள் எழுதுகின்றனர்.

நகரத்தார்கள் இளையாத்தக்குடியில் வந்து தங்கி வணிகத்தில் சிறப்படைந்து செல்வம் சேர்ந்த பின்பே இரணியூரும் பிள்ளையார் பட்டியும் பிரிந்தன. புள்ளிகளின் பெருக்கமும் பங்காளிகளிடையே வருமான அதிகரிப்பும் பிரிவுக்குக் காரணமாகும். தங்கள் வருமானத்தில் ஒரு கோயிலை நிர்வகிக்க உடன் பிறந்தவர்கள் தனித்தனியே கோயில்களைஒப்புக்கொண்டனர்

மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் சிறந்த சில கோயில்களை வணிகக்குழுக்களே நிர்வகித்தன. தங்களுக்கிடையே வணிகத்தில் மகமை வாங்கி அந்த வருமானத்தைக்கொண்டு நடத்தினர். ஆரம்பத்தில் ஊர்ச்சபைகள் இன்ன சரக்குக்கு இவ்வளவு வரி என்று விதித்து வசூலித்துக் கோயிற் செலவுகளைச் செய்தன. பின்பு இதனை நேரடியாகவே வணிகக் குழுக்கள் நடத்தின; திருக்கோயில்களைக் கட்டின. இந்தப் பழக்கம் வணிகரிடையே வளர்ந்தது. தாம் மேற்கொண்ட கோயிலை ஒட்டியே வணிகர் வாழ்ந்தனர். அதனால் தங்கள் வியாபாரத்தில் வந்த வருமானத்தின் ஒரு பகுதியை ஒன்று திரட்டித் திருக்கோயிலை நிர்வகித்தனர்.

இவ்வாறு நாட்டுக்கோட்டை நகரத்தார் கள் தாம் பெற்றுக்கொண்ட கோயிலை ஒட்டியே வாழ்ந்து வளர்ந்தனர். வணிகத்தில் இருந்து மகமை வாங்கும் மரபு பின்னாளில் புள்ளி வரியாக மாறியது. வணிகம் செய்தவர் களுக்கு நிலையான வருமானம் ஏற்பட்டுச் சொத்துகளும், பொன்னும் பெருகின, எனவே தான் புள்ளிவரியாக மாறியது தங்களுக்குள் திருமணம் செய்யவும் உறவுமுறை அறியவும் கோயிலே பின்னாளில் மூலாதாரமாகி விட்டது. அந்தக்கட்டுப்பாடு தொடர்ந்து வருகிறது.

நடராஜர் அபிடேகங்கள் ஆறு

நமக்கு ஓர் ஆண்டு, தேவர்களுக்கு ஒரு நாள் என்பது ஓர் ஆண்டில் நடராஜருக்கு அபிடேகம் ஆறு நாட்கள்.

1. சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தில் கனக சபையில், மாலையில் அபிடேகம்.
2. ஆனி மாதத்தில் உத்திர நட்சத்திரத்தில், இரஜசபை என்னும் ஆயிரங்கால் மண்டபத்தில் உதயத்திற்கு முன் 4 மணிக்கு அபிடேகம்.
3. ஆவணி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில், கனகசபையில், மாலையில் அபிடேகம்.
4. புரட்டாசி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனகசபையில், மாலையில் அபிடேகம்
5. மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் இராஜசபை என்னும் ஆயிரங்கால் மண்டபத்தில் உதயத்திற்கு முன் 4 மணிக்கு அபிடேகம்.
6. மாசி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில், கனகசபையில் மாலையில் அபிடேகம்.

இவ்வபிடேகங்கள் நிகழும் தருணத்தில் நடராஜரைக் கண்டு வணங்கி வழிபடுவது மிகவும் நல்லது, விசேடம் மிக்கது.

உ
சிவமயம்

"தில்லையில் ஐந்து சபை"

செந்தமிழ்ச்செல்வர், புலவர்
டாக்டர் ஐ. ஆனந்தநடராஜ தீக்ஷிதர்
M.A., B.O.L., Dip. in Sans., Ph.D.
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தில்லைக் கோயில் உலகத்திற்கே கோயில். கோயில் என்றாலே தில்லையைத்தான், சிதம்பரத்தைத் தான் குறிக்கும். மூர்த்தி, தலம் தீர்த்தம் என்ற மூன்றினாலும் விளங்கும் தில்லை பஞ்சபூதஸ்தலங்களில் ஆகாயத்தின் வடிவான தாகும். அவற்றுள் சிதம்பரம் இதயமாகலின், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களும் நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்டவத்தில் அமைந் துள்ளன. இந்தத் தாண்டவம் உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டு நடைபெறு கின்றது. இறைவனது முழுமையான விளக்கம் அமைந்துள்ள இடம் இத்தலமே. மொழிக் கெல்லாம் அடியாகிய ஒலித்தோற்றம் தோன்றி யதும், சிலம்பொலியாகிய பரதநாதம் தோன்றி யதும் இத்தலத்திலே ஆகும். சைவத்திரு முறையைப் பாதுகாத்து அளித்த உயர்வாலும், இசையுலகிற்கே பிறப்பிடமாக இருப்பதாலும், அருள் விளக்கத்து அடித்தலமாக இருப்பதாலும் இன்றும், என்றும் திருமுறை ஓதுபவர்கள் திருச்சிற்றம்பலம் என்று தொடங்கி முடிக்கும் போதும் இதையே கூறி முடிக்கின்றார்கள்.

கோயிலின் தொன்மை:

தில்லைக் கோயில் உபநிஷத்துக்களில் குறிக்கப்பட்டுள்ளது. பதஞ்சலியோடு உட னுறைந்த திருமூலர் கி.மு. 6-ஆம் நூற்றாண் டினர் என்று கூறப்படுவதால் அவரால் குறிக்கப் பெற்ற திருவம்பலம், திருக்கூத்து, சிதம்பரம் முதலியன கி. மு. 6-ஆம் நூற்றாண்டின் முன்னரே விளக்கம் பெற்றிருக்கலாம். சோழ மன்னர்கள் தங்கள் குலதெய்வமாகத் தில்லைப் பெருமானை வழிபட்டு வந்தனர்.

தில்லையின் பெருமையைத் திருமந்திரம், சைவத்திருமுறை, அருணகிரிநாதர் திருப்புகழ், இராமலிங்க சுவாமியின் அருட்பாக்கள், வடமொழியில் பல நூல்கள் விரிவாகக் கூறு கின்றன. இங்கு இறைவனை உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று வகையாலும் காண்கிறோம். ஸ்ரீ நடராஜர் உருவம், ஸ்ரீ ஸ்படிகலிங்கம் அருவுருவம்; ஸ்ரீ இரகசியம் அருவம். ஸ்ரீ நடராஜரைத் தரிசித்து, ஸ்ரீ ஸ்படிக லிங்கத்தை உள்ளத்தில் அமைத்துக் கொண்டு ஸ்ரீ இரகசியத்தைத் தியானம் செய்ய வேண்டு மென்ற குறிப்பு இவற்றால் தோன்றும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆக இம்மூவரும் ஒரே இடத்தில் கோயில் கொண்டுள்ள உயர்ந்த தலம் இதுவேயாம்.

ஆடலின் பெருமை:

தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ நடராஜப் பெருமான் தாருகாவனத்து ரிஷி களது செருக்கை அடக்க ஒரு காலத்தில் ஆடினர். மீண்டும் இவ்வையத்தில் பதஞ்சலி வியாக்கிர பாதருக்கும் காட்ட ஆடிய ஆனந்த தாண்ட வத்தைத் தில்லையில் ஸ்ரீ நடராசர் இன்றும் ஆடிக் கொண்டிருக்கிறார்.

புலவர்கள் சொல்லோவியமாகக் கூறி யிருக்கும் இத்தாண்டவத்தைக் கலைவல்ல சிற்பி கள் அழகு மிளிரும் சிற்ப உருவமாகச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். கூத்தப் பெருமானின் திருவருளே சிவகாமசுந்தரியாகும். இவள் அருட்சக்தியாம்.

சித்சபை:

தில்லையில் ஐந்து சபைகள் உள்ளன. ஆனந்த தாண்டவம் நடைபெறும் சபையே சித்சபையாகும். கனகசபை, தேவசபை, நிருத்த சபை, இராஜசபை என்பன மற்ற நான்கு சபைகளாம். இக்கோயிலின் ஆதி அமைப்பு சிற்றம்பலமும், பேரம்பலமுமாகும். சித்சபை மரத்தால் கட்டப்பட்டு இன்றும் பல்லவர் கட்டிய குகைக் கோயிலுக்கும், கற்கோயிலுக்கும் முந்திய நிலையில் தோன்றுகின்றது. இச் சபையைத் திருச்சிற்றம்பலம் என்பர். ஸ்ரீ நடராசப் பெருமானும், அவருடைய இடப் பாகத்தில் சிவகாமசுந்தரி அம்மையும் இருக்கும் கருவறை இதுவேயாகும். இதை மாணிக்க வாசகர் "எழில்பெறும் இமயத்தியல்புடை யம்பொற் பாலிதரு புலியூர்ப்பொது" என்று கூறுகின்றார். இது தங்க ஓடுகளால் வேயப் பெற்றிருக்கின்றது. இதன்மேல் தங்கக் கலசங்கள் ஒன்பது உள்ளன. அவை ஒன்பது சக்திகளாகும்.

மேலும் அதிலுள்ள கைம்மரங்கள் 64-ம் கலைகளாம் ஓடுகள் 21600-ம் மனிதன் ஒவ்வொரு நாளும் விடும் சுவாசங்களின் எண்ணிக்கையும், அதற்குப் பொருத்தப்பட்ட ஆணிகள் 72000-மும் நம்முடைய சுவாச சஞ்சார ஆதாரமான நாடிகளின் கணக்கையும் கொண்டு நமது இருதயத்தில் இருக்கின்ற ஈசுவரனே இங்கும் இருக்கிறார் என்பதை அறியவே நமது உடல்போல் அமைந்துள்ளது. இச்சபையில் உள்ள ஒவ்வொரு பொன் ஓட்டிலும் "சிவாயநம" என்ற பஞ்சாட்சரம் எழுதப் பட்டுள்ளதாகத் தில்லையுலா கூறுகிறது. சித் சபையில் ஸ்ரீ நடராஜப் பெருமானது வலப் பக்கத்தில் சிதம்பர இரகசியம் அதாவது ஆகாயலிங்கம் மந்திர உருவமாகத் திருவம்பலச் சக்கரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டுக்கு ஒரு முறை புனுகுச்சட்டம் சாத்தப் படுகின்றது. தங்க வில்வமாலை திருவம்பலச் சக்கரத்தின் முன்னே தொங்கவிடப்பட்டுள்ளது; இது திருவாட்சியுடன் அமைந்துள்ளது. ஸ்ரீ நடராஜரின் முன்னிலையில் ஸ்ரீ இரத்தின சபாபதியும், ஸ்ரீ ஸ்படிகலிங்கமும், இடது பக்கத்தில் ஸ்ரீ சுவர்ண கால பைரவரும், ஸ்ரீ நித்திய உத்சவரும் உள்ளனர்.

கனகசபை:

கனகசபை சிற்றம்பலத்திற்கு எதிரேயுள்ள எதிரம்பலமாகும். இங்கு பெருமான் தினமும் ஆறுகால பூஜைகளும், ஆண்டில் நான்கு முறை திருமஞ்சனமும் கொண்டருளுகின்றார்.

இங்குள்ள 18 தூண்களும் 18 புராணங்களைக் குறிப்பன. வெள்ளிப் பலகணிகள் 96. இவை தொண்ணூற்றாறு தத்துவங்களாகவும், ஸ்ரீசித்சபையிலுள்ள ஐந்து தூண்களும் ஐம் பொறிகளாகவும், பிரம்மபீடத்திலுள்ள பத்துத் தூண்களில் கீழ் ஆறும் சாத்திரங்களாகவும், மேலிருக்கும் நான்கும் வேதங்களாகவும் உள்ளன.

தேவசபை:

தேவசபை என்பது பேரம்பலம் என்றும் கூறப்படும். இங்கு உத்சவமூர்த்திகள் எழுந்தருளி யுள்ளனர். அநபாயனை இரண்டாம் குலோத்துங்கன் தன் குல முன்னோர் சிற்றம் பலத்தைப் பொன்வேய்ந்து திருப்பணி செய்த தால் இச்சபைக்குத் திருப்பணி செய்தான் என்று பெரிய புராணம் கூறுகின்றது. இங்குதான் பொது தீட்சதர்கள் கூட்டங்கள் கூடிப்பேசி முடிவெடுப்பர். கூட்டம் கூடும்போது ஒரு விளக்கில் ஸ்ரீ நடராஜரை ஆவாகனம் செய்து அவ்விளக்கின் முன்னிலையில்தான் தொடங்குவர்.

நிருத்த சபை:

இது ஸ்ரீ நடராஜப் பெருமான் திருமுன்னர் கொடிமரத்தின் தென்பால் உள்ளது. மிகவும் சித்திர வேலைப்பாடு அமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றது; மண்டபம் பரிகள் பூட்டிய தேர் அமைப்பு பெற்றது. இதில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தியும், சரப மூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்கள்.

இராஜ சபை:

இது ஆயிரங்கால் மண்டபமாகும். கோயிலின் வடகீழ்த்திசையில் உள்ளது. நடராஜப் பெருமான் ஆண்டில் மார்கழியிலும், ஆனியிலும் இங்கு எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளுகின்றார். ஆருத்திரா, ஆனித் திருமஞ்சன தரிசனங்கள் கொடுப்பதும் இம் மண்டபத்தில்தான். கீழ் வரிசைப் பத்திகள் முழுவதிலும் நர்த்தன உருவங்கள், இசையாளர் உருவங்கள் மிகவும் வனப்புடன் செதுக்கப் பட்டுள்ளன.

தில்லையில் எல்லாம் ஐந்தாக இருக்கும். திருச்சுற்று, படி, சபை என்று எல்லாம் திருவைந் தெழுத்துக்கள் போல் ஐந்து எண்ணில் அமையும்.

"இளைஞரால் முடியும்"

லேனா தமிழ்வாணன்

இளைஞர்கள் அணுவைப் போன்றவர்கள் அதை அழிவுச் சக்தியாக ஆக்காமல் ஆக்க சக்தியாக மாற்றிக் கொள்ள முடியும்.

இது அவர்கள் கையிலும் இருக்கிறது. அவர்களைக் கையாள்கிறவர்களின் கையிலும் இருக்கிறது.

கட்டுப்பாடற்ற ஒரு காட்டாற்றை எப்படி அணை போட்டு அதை ஆக்கச் சக்தியாக்கிக் கொள்ள முடியுமோ அதே போல் இளைஞர் சக்தியையும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் ஆக்கிக் கொள்ள முடியும்.

இளமை துடிப்பு மிகுந்தது. சக்திவாய்ந்தது. ஆனல் அனுபவம் அதிகமற்றது. வழிநடத்திச் செல்ல மட்டும் சரியான வழிகாட்டி அமைந்து விட்டால் சமுதாயப் பாதையைச் செப்பனிட்டு சீர்திருத்த வல்லது.

இங்கே கோளாறே முதுமைக்கும் இளமைக்கும் நடக்கும் கௌரவப் போராட்டம்தான். இளமை, முதுமையை மதிக்க வேண்டும் முதுமையின் மொழிகளை ஏற்க வேண்டும். முதுமையை இளமை அங்கீகரிக்க வேண்டும். முக்கியத்துவம் தரவேண்டும். இந்தப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தால்தான் இளமையும், முதுமையும் கை கோர்க்கும். இவை இரண்டும் கைகோர்த்து நடந்தால் நம் சமுதாயப் பரிணும வளர்ச்சி அபாரமாக இருக்கும்.

இளமையிடம் முதுமை பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும். கூடவே இருந்து கண்காணித்து வரவேண்டும். அதை விட்டுவிட்டு உனக்கு அனுபவம் போதாது, வயது போதாது பொறுப்புப் போதாது என்றெல்லாம் குறைகளாகச் சொல்லிக் கொண்டு போனல் அது, முதுமை இளமையைத் தயார்ப்படுத்துகிற வேலையில்லை. வருங்காலச் சந்ததி வளமுடன் நலமுடன் விளங்க முதுமையில் இந்த முக்கியப் பணி தலையாயது.

இளமை மிதமிஞ்சிய கட்டுப்பாடுகளை விரும்பாதது. இதை முதுமை உணர்ந்து தட்டிக் கொடுத்து சொல்லிக் கொடுப்பது நல்லது. இளமை, முதுமை, அனுபவமுதிர்ச்சி, அனுபவமின்மை என்ற முத்திரைகளையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, எங்கே அறிவும் செறிவும் இருக்கிறதோ அவை ஏற்கப்பட்டாக வேண்டும்.

முன்னைக்காட்டிலும் இளைய தலைமுறையானது அறிவிலும் செயல் திறனிலும் பன்மடங்கு உயர்ந்திருப்பதாக ஆசிரியர் உலகம் கூறுகிறது. இக்கருத்தை பெற்றோர் உலகமும் ஏற்கிறது தம்மில் தம்மக்கள் அறிவுடைமை என்பதை விரும்பாதவர்கள் இருக்க முடியாது தான்.

ஆனல் அதே நேரத்தில் நாகரிக வளர்ச்சி சமுதாய வளர்ச்சி என்ற பெயரால் எதுவும் முறையற்றதல்ல, எல்லாம் சாதாரணமானது தான் என்று தவறுகளை நியாயப்படுத்தும் போக்குஇன்று தலைதூக்கி வருகிறது. நாகரிகம் என்ற பெயரால் அநாகரிகச் செயல்கள் நிகழ்வதைத் தடுக்க இளைஞர் சமுதாயத்தால் முடியும். அந்த இளைஞர் சமுதாயம் தன்னைக் கட்டிக் காத்துக்கொள்வது இந்தக் கணத்தின் தலையாய கடமையாகும். அப்போது தான் வருங்காலத்தில் வளமான சமுதாயத்தை உருவாக்க முடியும். நாகரிகம் என்ற பெயரால் கல்வியிலிருந்தும் கடமையிலிருந்தும் தங்களைத் திசை திருப்பும் தீய சக்திகளை இளைஞர் சமுதாயம் புறக்கணித்து ஒதுக்க வேண்டும். இல்லையென்றல் அதற்குத் தலையாய ஆபத்துக் காத்திருக்கிறது என்று பொருள்.

இளைஞர் சமுதாயத்திற்கு எதையும் உடனுக்குடன் கிரகிக்கும் ஆற்றல் இருக்கிறது. இது ஒரு வகையில் நல்லது. ஒரு வகையில் தீயது. எனவேதான் கிரகிப்பவை நல்லவையாக இருக்க வேண்டும் என வற்புறுத்த வேண்டியுள்ளது.

இளைஞரிடையே புதிய எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன. அவை பெரும்பாலும் சத்துள்ள நல்ல எண்ணங்களாக இருக்கின்றன என்பது மகிழ்ச்சி தரும் விஷயம். காலங்காலமாக இருந்து வரும் மூட நம்பிக்கை

களுக்கு அர்த்தம் கேட்க ஆரம்பித்து விட்டது இளமை. காரணம் சொல்லி அதைச் சமாதானப் படுத்தினுலொழிய இது என்ன அர்த்தமில்லாத செயல் என்கிறது.

சாதி இனப் பாகுபாடுகளேயும், தீண்டாமையையும், பால்ய விவாகத்தையும் கேலி செய்து சிரிக்க ஆரம்பித்து விட்டது இளமை. புதிய சிந்தனைகள் பிறக்க ஆரம்பித்து விட்டன. அவை காலப்போக்கிற்கு ஏற்றவகை யிலும் உள்ளன. இவை சமுதாய மறுமலர்ச்சிக்கு வந்திடும் சத்தான வித்துக்கள் அல்லவா?

செட்டியார் சேர்த்த செல்வம்

சொ. சொ. மீ. சுந்தரம்

''படகில் தண்ணீரும் வீட்டில் செல்வமும் நிறைந்து விட்டால் இரண்டு கைகளாலும் அள்ளியள்ளி வெளியே தள்ளுங்கள். அப் பொழுது தான் படகும் பிழைக்கும், வீடும் பிழைக்கும்'' என்ருர் கபீர்தாசர்.

''செல்வத்தை நேர்மையான வழியில் சேர்த்து நல்ல செயலுக்குப் பயன் படுத்தினுல் அதுவேள்வியாகிறது'' என்ருர் இராமகிருஷ்ண பரமஹம்சர்.

''பணம் திரட்டும் கவலேயோடு கூடவே அந்தப் பணத்தைப் பயனுள்ள முறையில் செல விடும் கவலேயும் சேர்ந்திருக்க வேண்டும். பணம் இருந்தால் அதை எறிந்துவிட்டு மனேவி மக்களே வீட்டை விட்டு வெளியே துரத்தி விட வேண்டியதில்லே. தன்னிடம் உள்ளவற்றை எல்லாம் கடவுளுக்கே அர்ப்பணம் செய்து அவருக்குச் சேவை செய்யவே அவர் அருளிய வற்றைப் பயன்படுத்த வேண்டும்''. என்ருர் காந்தியடிகள்.

இந்த மூன்று சான்ருேர்களின் கருத்துக் களையும் பொன்னே போல் போற்றி ''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லவராய்'' வாழ்ந்த பெருமக்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள். செல்வம் போதுமான அளவிருந்தால் நம்மை அது காப்பாற்றும். அதிகமாகச் சேர்ந்து விட்டால் நாம் தான் அதைக்காப்பற்றுவதற்காகக் கவலேப்பட வேண்டிய சூழ்நிலே உருவாகிவிடும். இதையுணர்ந்த நகரத்தார்கள்,

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லே
பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லே
இடை நடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
கேன்கச்சி ஏகம்பனே

என்று பட்டினத்தார் பாடிய தற்கேற்ப, இச் செல்வம் சிவன்தந்தது என்று உணர்ந்து கொண்டார்கள்.

பொருளேப் போற்றுங்கால் கஞ்சனேப் போல் இருந்து போற்ற வேண்டும். அதைப் பிறருக்குக்கொடுக்குங்கால்பற்றற்றவனேப்போல் இருந்து கொடுக்க வேண்டும் என்பது சுக்கிர நீதி சிக்கனமாய் இருந்து சேர்த்த பணத்தைத் திருப்பணிக்கு அள்ளிக் கொடுத்த செட்டியார் களேப் போல வேறு யாரையும் இந்த நல்லுரை க்குஎடுத்துக்காட்டாகச் சொல்ல முடியாது.

சிதம்பரம் திருமுறைத் தலம். ஆக்கிக் காத்து அழித்து மறைத்து அருளும் நடராஜப் பெருமான் திருவடிகளே செல்வம் அவற்றை வணங்குதலே செல்வம்.

செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம் பலம்மேய

செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே என்பது திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு. ஐந்தெழுத்தே செல்வம் என்று காட்டுவதற்காக ஐந்து முறை செல்வம் என்து குறிப்பிட்டு, அதைப் பெற்றவர் செல்வர் என்றும் அதைக் கொடுக்கும் சிவபெருமான் செல்வன் என்றும் பாடியருளினர் ஞானசம்பந்தர். இதையுணர்ந்த நகரத்தார்கள் சிதம்பரம் மதுரை காஞ்சீபுரம் திருக்காளத்தி திருவண்ணாமலை இராமேச்சுரம் ஆகிய பெருந்தலங்கள் பலவற்றிலும் திருப்பணி செய்து, செல்வம் கொடுத்துச் செல்வனைப் பெற்றார்கள்,

நகரத்தார்கள் பொருளைச் செலவிட்ட வரலாற்றை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். விளம்பரமில்லாமல் திருப்பணி செய்து மன்னர் பின்னோராகி அறம் வளர்த்தது முதற்பகுதி. அண்ணாமலையாரும் அழகப்ப வள்ளலும் தியாகராசரும் தோன்றிச் செல்வம் கொடுத்தால் செலவழிந்து போகும் என்று கல்விப் பயிர் வளர்த்து நகரத்தார் பணிகளால் நாடு செழிக்கக் கல்வி நிலையங்களும் பல்கலைக் கழகங்களும் கண்டது இரண்டாவது பகுதி.

ஊரார் பார்வையில் முற்பட்டோராகவும் உண்மை நிலையில் பிற்பட்டோராகவும் இரண்டும் கெட்டான் வாழ்க்கை வாழ்ந்து கொண்டு திருமணங்களுக்காகப் பெரும் பொருள் செலவழித்துக்கொண்டு. வட்டியில் சாப்பிடாமல் அசலில் சாப்பிட்டு அழித்துக் கொண்டிருக்கும் இன்றைய வாழ்க்கை மூன்றாவது பகுதி.

அறிவின் முதல் பாடம் செல்வத்தை வெறுப்பது. அன்பின் முதல் பாடம் செல்வத்தை அனைவர்க்கும் வழங்குவது. பணம் தேடுவது எல்லோராலும் இயலும். அதைச் செலவு செய்வதற்கு அறிஞருக்குத் தான் தெரியும். செட்டிநாட்டுப் பெருமக்களுக்கு இவை எல்லாம் தெரியும். கோவலனைப்போல அனுபவிக்கவும் தெரியும். பட்டினத்தாரைப் போலப் பற்று அறுக்கவும் தெரியும்.

செட்டிநாட்டிலுள்ள திருமணமாகாத பெண்களுக்குத் திருமணம் செய்விக்கவும், வேலையில்லாத இளைஞருக்கு வேலை கொடுக்கவும் செட்டிநாட்டு மக்கள் நினைத்தாலே முடியும். இதைச் சாதிக்கச் சங்கங்கள் தேவைப்படு கின்றன. காலத்துக்கேற்ற படி இந்தச் சங்க காலத்தில்நாமும் சங்கங்களின் மூலம் முன்னேற்றம் கண்டு நாடு வாழ நாமும் வாழ்வோம்.

சிதம்பரம் - ஓர் அறிமுகம்

அரு. இராமநாதன்

சிதம்பரம் என்ருல் ஞானப்பெருவெளி. 'சித்' எனில் ஞானம் - அம்பரம் எனில் பெருவெளி. இத்தலம் தில்லை, திருச்சிற்றம்பலம், பொன்னம்பலம் எனவும் வழங்கப் பெறும்.

சிதம்பரம் நகரின் பரப்பளவு ஏறக்குறைய 5 சதுர கி.மீ.

		திறந்திருக்கும் நேரம்	
		காலை	மாலை
சிறப்பு:	நடராஜர் (சபாநாயகர்) திருக்கோவில்;	6 to 12	5 to 10
	தில்லைகாளி கோவில்	6-30 to 12	4-30 to 8-30

அண்ணுமலைப் பல்கலைக்கழகம் (1929ல் துவக்கம்); 600 ஏக்கர் பரப்பு

நடராஜர் திருக்கோவில்

பஞ்ச பூதத்தலங்களுள் ஆகாயத்தலம் எனவும், பூலோகக் கைலாசம் எனவும் விளங்கும் இக்கோயில் 10 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. பரமசிவனின் அம்சமான ஸ்ரீநடராஜர் ஆனந்த தாண்டவம் ஆடுகிருர்.

ஐந்துசபைகள்:

சித்சபை, கனகசபை, நிருத்த (நடன) சபை, தேவசபை, இராஜசபை (ஆயிரங்கால் மண்டபம்)

நான்கு கோபுரங்களும் நால்வரும்:

கோபுரம்	கட்டியவர்	வாயிலாக உட்புகுந்த சமயக்குரவர்	சிறப்பு
கிழக்கு	சோழர்கள்	மாணிக்கவாசகர்	ஏழு அடுக்கு, 135 அடி, நாட்டிய முத்திரை
தெற்கு	பல்லவர்கள்	திருஞான சம்பந்தர்	எழுநிலை சிற்பம்
மேற்கு	பாண்டியர்கள்	திருநாவுக்கரசர்	நாட்டிய முத்திரை
வடக்கு	கிருஷ்ண தேவராயர்	சுந்தரர்	140 அடி.

தினசரி பூஜா காலங்கள்:

பூஜை	காலை மணி
பால் நைவேத்தியம் (திருவனந்தல்)	6
காலை சாந்தி	9
இரத்தினசபாபதி அபிஷேகம், தரிசனம்	10
இரண்டாம்காலம்	11
உச்சிக்காலம்	12
	மாலை மணி
சாயரட்சை	6
	இரவு மணி
இரண்டாம்காலம்	8
அர்த்தசாமம்	10

உற்சவங்கள், பெருவிழாக்கள்:

திரு ஆதிரைத் திருநாள் — மார்கழி ஆருத்ரா தெரிசனம்
ஆனித்திருமஞ்சன தெரிசனம்
பங்குனி உத்திரம்
நாட்டியாஞ்சலி (பிப்ரவரி-மார்ச்)
பிற மகாபிஷேக மாதங்கள்: சித்திரை, ஆவணி, புரட்டாசி, மாசி

தத்துவ விளக்கங்கள்:

பொன்னம்பலம்:

ஒன்பது கலசங்கள்	—	ஒன்பது சக்திகள்
64 கைம்மரங்கள்	—	64 கலைகள்
21, 600 ஓடுகள்	—	மனித தினசரி சுவாசம்
72,000 ஆணிகள்	—	மனித நாடிகள்

சிற்சபை:

5 தூண்கள்	—	ஐம்பொறிகள்
பரமபீட கீழ்ப்புற தூண்கள் 6	—	ஆறு சாத்திரங்கள்
மேல்புற தூண்கள் 4	—	நான்கு வேதங்கள்

கனகசபை:

18 தூண்கள்	—	18 புராணங்கள்
5 வெள்ளிப்படிகள்	—	பஞ்சாட்சரங்கள்

நடராசர்:

உடுக்கை	—	உலகின் தோற்றம்
அபயஹஸ்தம்	—	காத்தல்
இடக்கர நெருப்பு	—	அழித்தல்
முயலகன் மீதுள்ள வலக்கால்	—	அடக்கல்
எடுத்த பொற்(குஞ்சித)பாதம்	—	முக்தியருள்

சிதம்பரத்தில் காண வேண்டிய பிற திருக்கோயில்கள்:

			திறந்திருக்கும் நேரம் காலை	மாலை
1.	தில்லையம்மன் -வடக்கு வீதியை அடுத்து	அம்மன் நான்முகி, உக்கிரகாளி காளிக்கு நல்லெண்ணை மட்டும் அபிஷேகம்	6-30 to 12	4-30 to 8-30
2.	இளமையாக்கினர் -கடைத்தெரு அருகில்	ஸ்ரீ வியாக்கிரபாதர் பூசித்த லிங்கம் திருநீலகண்டர் முதுமை நீங்கி இளமைபெற்றது. யௌவனம்பாள், யௌவனம்பிகை	6-30to11-30	5-00 to 8-00
3.	அனந்தீசுவரர் -கோயில் மின்வாரியம் அருகில்	ஸ்ரீ பதஞ்சலி பூசித்த லிங்கம்	7 to 10	5 to 7-30
4.	பிரம்மராயர்கோவில்	சாஸ்தா அருபமாக 'பிரம்மாராயர்' என்னும் பெயரில்		6 to 8 திங்கள்
5.	ஸ்ரீகோதண்டராமர் -மேலவீதி கஞ்சித் தொட்டி அருகில்			6 to 8
6.	ஸ்ரீ மாரியம்மன் கோவில் -பேருந்து நிலையம் அருகில்			
7.	பாசுபதேசுவரர் அண்ணாமலை நகர்	பாடல் பெற்ற தலம் பாசுபதேசுவரர்; நல்லநாயகி		

சிதம்பரம் சூழலில் நகரத்தார் அறப்பணிகள்

வெ. நாராயணன்
(தலைமை ஆசிரியர், இராமசாமி செட்டியார் நகர மேல்நிலைப்பள்ளி, சிதம்பரம்)

பண்டைக் காலத்தில் மன்னர்களால் மேற்கொள்ளப்பட்ட அறப்பணிகளில் பல பிற்காலத்தில் நகரத்தார்களால் தொடர்ந்து நிறைவேற்றப்பெற்றன.

1879-ம் ஆண்டில் கானாடு காத்தான் திரு சா. ராம. முத்தையா செட்டியார் அவர்களின் பெருமுயற்சியாலும் நகரத்தார்களின் உதவியாலும் முக்குறுணி அரிசிப்பிள்ளையார் கோவில் முழுவதும் கட்டிச்சிற்சபையில் பொற்றகடுகள் வேய்ந்து நடராஜர் கோயிலின் பல பகுதிகளையும் புதுப்பித்து ரூபாய் 30 லட்சம் செலவு செய்து 15—4—1891-ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

வள்ளல் அண்ணாமலை அரசரின் மூத்த சகோதரர் கானாடுகாத்தான் திவான் பகதூர் சா. ராம. மு. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள் ரூபாய் இரண்டு லட்சம் செலவில் 23—2—1915-ல் சிதம்பரம் நகருக்கு தண்ணீர்க் குழாய்கள் அமைத்து நீர் பெருக்கி நிலைத்த புகழ்பெற்றார். அப் பெருந்தகையால் ரூபாய் 2 லட்சம் செலவில் நகரின் மையத்தில் எல்லா மதத்தினரும், எல்லா இனத்தினரும் கல்வி பயில்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு உயர் நிலைப்பள்ளியும், ஒரு மாணவர் தங்கும் விடுதியும் 12—11—1915 முதல் சிறப்பாக இன்றும் நடைபெற்று வருகிறது. அவரது இளவல் ராஜாசர் அண்ணாமலைச்செட்டியார் சிதம்பரம் கோவிந்தராசர் கோயில் திருப்பணியை 19—8—1929-ல் துவக்கி 24—5—1934-ல் நிறை வேற்றி வைத்தார்கள். காரைக்குடி சைவத்திரு சொக்கலிங்க ஐயா அவர்கள் ரூபாய் இருபதாயிரம் செலவில் மெய்கண்ட வித்தியா சாலையை நிறுவினர். காரைக்குடி மெ. செ. மெ. குடும்பத்தினரால் ரூபாய் பதினையாயிரம் செலவில் ஒரு வேதபாடசாலையும், காரைக் குடி சு ராம சு. அ சு. நா. குடும்பத்தினரால் மற்றொரு வேதபாடசாலையும், கானாடு காத் தான் வெ. சா. குடும்பத்தினரால் ஒரு தேவார பாடசாலையும் அமைக்கப்பெற்றன.

பள்ளத்தூர் க. ப. குமரப்ப செட்டியாரவர்களால் ரூபாய் எழுபதினாயிரம் செலவில் குரு பூசைமடமும், பள்ளத்தூர் சொ. மு. அ. குடும்பத்தாரால் ரூபாய் இருபதினாயிரம் செலவில் பசுபடமும், காரைக்குடி மெ. செ. குடும்பத்தினரால் திருநந்தவனமும், கானாடு காத்தான் வெ. சா. குடும்பத்தினரால் ரூபாய் ஒரு லட்சம் செலவில் அன்ன சத்திரமும் அமைக்கப் பெற்றுள்ளன. கோவிலூர் கிளை பொன்னம்பலசுவாமிகளால் ரூபாய் ஒரு லட்சம்மதிப்புடைய சொத்துக்களுடன் ரூபாய் எழுபதினாயிரம் செலவில் வேதாந்த மடம் நிறுவப்பட்டுள்ளது கானாடுகாத்தான் வெ. சா. குடும்பத்தாரால் ரூபாய் ஒரு லட்சம் செலவில் சிவகங்கைத் திருக்குளம் திருப்பணி செய்யப் பெற்றது.

காரைக்குடி மெ. செ. மெ. குடும்பத்தார் காலையில் பால் நிவேதனம், இரண்டாங் காலத்தில் தயிரமுது, ஏழுகாலத்தும் கோயில்களுக்குக்கற்பூரம் அளித்தல், திருநீறு அளித்தல், மாலையில் நடராஜருக்கு மாலை அளித்தல், அர்த்தசாம நிவேதனம்,பள்ளியறை நிவேதனம் கோவிந்தராசப்பெருமாளுக்கு அர்த்தசாமத்தில் நிவேதனம் ஆகியவற்றிற்குக் கட்டளைகள் வைத்து நடத்தி வருகின்றனர்.

ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 1920ம் ஆண்டு மீனாட்சி கல்லூரியை சிதம்பரத்தில் நிறுவினார்கள். 1929-ல் அன்னாரால் ரூபாய் 50 லட்சம் நன் கொடை அளிக்கப் பட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு, இந்திய நாட்டின் கல்வி வளர்ச்சி வரலாற்றில் அண்ணாமலை அரசர் தனிப்பெரும் புகழ் பெற்றார். டாக்டர் ராஜாசர் முத்தையா செட்டியாரவர்கள் அண்ணாமலை நகரில் சீதை ஆச்சி உயர் நிலைப் பள்ளியை நிறுவினார்கள்.

காரைக்குடி பெரி. க. சின்னையா செட்டியார் வகைக் குடும்பத்தாரால் சிதம்பரத்தில் இளமையாக்கினர் கோயில் ரூபாய் ஐந்து லட்சம் செலவில் கட்டப் பட்டுள்ளது. காரைக்குடி பெரி. க. குடும்பத்தினர் இளமையாக்கிய திருக்குளத்தைச் சிறப்பாகக் கட்டியுள்ளனர்.

சிதம்பரத்தில் அனந்தேசுவரக்கோவில் கோட்டையூர் வெ. சி. அ. குடும்பத்தினரால் திருப்பணி செய்யப்பட்டது. அண்ணாமலை நகரில் அமைந்துள்ள திருவேட்களத்தில் சிவாலயம் கானாடு காத்தான் சா. ராம. மு. இராமசாமிசெட்டியார், கா. பெ. அ. பெத்தபெருமாள் செட்டியார் ஆகியோரது முயற்சியால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

திரு நெல்வாயில் என்றழைக்கப்படும் சிவ புரியில் சிவாலயம் கோட்டையூர் க. வீ. சொ. வீ. அழகப்பசெட்டியார், க. வீ. மு. ப. கதிரேசன்செட்டியார், காரைக்குடி முத்து. அரு. மு. அருணாசலம் செட்டியார் ஆகிய மூவராலும் 24—5—1928ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

அண்மையில் நடராஜர் கோயில் மூலநாதர் கோவில் கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களால் புதுப்பிக்கப்பட்டது.

அண்மையில் நடைபெற இருக்கும் நடராஜர் ஆலய கும்பாபிஷேகத்தில் தெற்குக் கோபுரம் புதுப்பிக்கும் பணியை டாக்டர் ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் ஏற்றுக்கொண்டு சிறப்புறச் செய்துள்ளார்கள்.

தேவகோட்டை திருமதி. அள. சித. லெ. ராம அரு. சிவகாமி ஆச்சி அவர்கள் (இரட்டை ஆனாருனா அவர்களின் மகள்) ரூபாய் ஐம்பதாயிரம் சொந்த செலவில் அழகிய வெள்ளி ரிஷப வாகனம் ஒன்றை உருவாக்கி நடராஜர் திருக்கோயிலுக்கு 1986ஆம் ஆண்டு ஆவணி மாதம் அளித்துள்ளார்கள்.

கவி அரசர் பாரதியால் நகரத்தார் சமூகம் கீழ்க்கண்டவாறு பாராட்டப்பட்டுள்ளது சாலப் பொருத்தமுடையதே.

''வண்மையே குலதர்மமெனக் கொண்டார்;
தொண்டொன்றே வழியாக் கண்டார்;
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடை
யார்''.

''பலநூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்,
நலமுடைய கலாசாலை புத்தகசாலை
பலவும் நாட்டியுந்தம்
குலமுயர நகருயர நாடுயர உழைக்
கின்றார்''

''தில்லைப் பதியுடையான் சிற்றம்
பலந்தன்னில்
அல்லும் பகலுநின் றாடுகிறான் —
எல்லைக்கண்
அண்ணாமலை மன் அமைத்த கலைக்
கழகம்
கண்ணாரக் கண்டு களித்து''.

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

இக்கட்டுரை வித்துவான் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் அவர்களால் தொகுக்கப்பட்ட 'நாட்டுக்கோட்டை நகரத் தார் வரலாறு' என்னும் நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

கோவிலூரும் நகரத்தாரும்*

பேராசிரியர். வீர. முத்துவீரப்பன்
அரு. இராமநாதன்

கோவிலூர்-தோற்றமும் வளர்ச்சியும்:

காரைக்குடி நகரின் மேற்கு எல்லையான கோவிலூர் 18 ஆம் நூற்றுண்டு வரை கழனி (வயல்), கழனிவாசல், சமி(வன்னி)வனம் என விளங்கிற்று. இந்த வன்னி மரக் காட்டினூடே சுயம்பு லிங்கம் ஒன்றிருந்தது. இதன் தோற்ற காலம் தெரியவில்லே. இந்த சிவலிங்கம் வீரசேகர பாண்டியனுக்கு கொற்ற வாள் வழங்கியதால் 'கொற்றவாளீசர்' எனும் பெயர் நிலவுகிறது.

12-ஆம் நூற்றுண்டு வரை கூரைக் கொட்டகையிலும், பின் செம்பூரான் கற்களா லான கோவிலிலும் சிவன், அம்பிகை உருவங் கள் இருந்தன. 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இங்கு வந்த காரைக்குடி முத்து ராமலிங்க தேசிக ஞானியார், நகரத்தார் துணை கொண்டு கருங்கல் திருப்பணி செய்து கயிலாச நாதர், நித்திய கல்யாணி, அகத்தீசுவரர் இறை உருவங்களேயும் நிலேநாட்டினுர்கள். திருக்குளம் சத்திரங்கள், மடங்கள், வீடுகள் இவற்றையும் அமைத்து 'கோவிலூர் ஆண்டவர்' எனப் புகழ் பெற்றுர்கள். கோவிலே ஒட்டி உண்டான ஊர் 'கோவிலூர்' ஆயிற்று.

கோவிலூர் ஆதீனமும் திருப்பணிகளும்:

18-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் முத்துராமலிங்க ஞான தேசிகர் நாளில் கருங்கல் திருப்பணியும் 1890 ஆம் ஆண்டு சிதம்பர ஐயா என்ற கருணுநிதி சுவாமிகள் காலத்தில் ரூ 70,000 செலவில் திருக்குள மைய மண்டபமும் நான்காம்பட்டம் ஸ்ரீராமசாமி ஞானதேசிகர் காலத்தில் அஷ்டலட்சுமி மண்டபமும் முடிக்கப்பெற்றன.

கோவிலூரின் பொற்காலம் எனப்படும் ஐந்தாவது பட்டம் திருக்களர் ஆண்டவர் எனும் வீரப்ப ஞான தேசிக சுவாமி காலத்தில் சொற்கேட்டான் மண்டபம், உற்சவ மண்டபம், நடராசர் சபா மண்டபம், தீர்த்த மண்டபம், கொடிமரம், அம்மன் கருங்கல் கருவறை, அர்த்த மண்டபம், நவரத்ன நாற்பக்க பிரகாரம், மகாமண்டபம், விமான கோபுரம், மடைப்பள்ளி, திருமதில், வன்னி விநாயகர் கோவில், இராசகோபுரம் புதுப் பித்தல், வீதிகள் கொட்டகைகள் அமைப்பு, தங்க, வெள்ளி அங்கிகள், நவரத்ன திருமுடி கள் எனப் பல்வேறு திருப்பணிகள் செவ்வனே நிறைவு பெற்றன.

கோவிலூர் ஆதீன பாடத்திட்டங்கள் சில:

சேஷாத்திரி சிவனுர் இயற்றிய நாநாஜீவ வாதக்கட்டளே, திருவேங்கடத்தாரின் கீதா சாரத் தாலாட்டு, எறும்பூர் தத்துவராய சுவாமிகளின் நூல்களான சசிவன்ன போதம் அஞ்ஞுவதைப்பரணி, ஈசுரகீதை. பிரம்மகீதை விருத்தாசலம் குமாரதேவரின் மகாராஜத்துறவு பேரூர் சாந்தலிங்கரின் வைராக்கிய சாதகம் வைராக்கிய தீபம், சிதம்பரஞான தேசிகரின் இலட்சணுவிருத்தி, துறைமங்கலம் சிவப்பிரகா சரின் வேதாந்த சூடாமணி, திருவிடைமருதூர் உலகநாத சுவாமிகளின் விவேக சூடாமணி, வீர. சுப்பையா சுவாமிகளின் பஞ்சதசி, நன்னிலம் தாண்டவராய சுவாமிகளின் கை வல்ய நவநீதம், பட்டனுரின் பகவத்கீதை மொழிபெயர்ப்பு, ஆளவந்தாரின் ஞான வாசிட்டம் ஆகிய 16, **வேதாந்த சாத்திரங் களும்** கோவிலூர் ஆதீனப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுச் சிறப்பிக்கின்றன.

கோவிலூருடன் நகரத்தார் தொடர்பு:

கோவிலூரில் மூன்றுவது பட்டத்தில் இருந்த கருணுநிதி சுவாமிகள் சிருங்கேரியில் ஒரு மண்டபம் கட்ட பொருளும், வெள்ளிப் பாத்திரங்களும், வெள்ளிக் கேடகங்களும் சேகரித்து அனுப்பினுர்கள். எட்டாவதுபட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிகர் அவர்கள் சிருங்கேரி யாகத்திற்கு நகரத்தார்களிடம் வாங்கிய காணிக்கையை செலுத்தினுர்கள் **சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் கோயில், கோவிலூரிலுள்ள திருநெல்லே அம்மன் கோவில் பாணியில் கட்டப்பெற்றது.** இதற்

குரிய பொருளை நகரத்தார்கள் வழங்கி யுள்ளனர்.

மிகத் தொன்மைக் காலந்தொட்டே நகரத்தார்கள் ஞானமார்க்கத்தில் ஈடுபட்டு வந்திருப்பதற்கு பட்டினத்து சுவாமிகள், காரைக்கால் அம்மையார் இவர்களது வரலாறு சான்று. இக்காலத்தில் ஞான மார்க்கம் கொண்டுள்ள நகரத்தார்களை நல்வழிப்படுத்தும் பணி செய்து வருவது கோவிலூர் ஆதீனம். கோவிலூர் என்னும் பெயரே கேட்கும்தொறும் இன்பம் பயப்பது. நகரத்தார்கள் தங்களுடைய முன்னேற்றம் கருதியும், வாழ்வியல் மாறுதல் குறித்தும் முடிவு செய்ய 96 ஊர் நகரக் கூட்டங்கள் கோவிலூரில்தான் கூடுவது மரபு. கோவிலூர் அருளாளர்களின் அறிவுரை களை மதித்தும், அவர்களது வேண்டுகோளுக் குச் செவிசாய்த்தும் வருபவர்கள் நலம் பலவும் பெறுதல் கண்கூடு. நகரத்தார்கள் தாங்கள் வாழும் ஊர்களுக்கும் கோவிலூர் அருளாளர் களை அழைத்து, அவர்களுடைய அருளுரைப் படி நடப்பது. நன்மை தரும். குறிப்பாக இளைஞர்கள் இந்த ஆதீனத்தைப்பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ளவும், இந்த ஆதீனத்துடன் தொடர்பு கொள்ளவும் வேண்டும்.

கோவிலூரில் நகரத்தார்கள் மட்டுமே பட்டத்திற்கு வர உரிமையுடையவர்கள் என்பது நம் சிந்தனைக்குரியது.

கோவிலூருடன் நம் தொடர்பை புதுப் பித்துக் கொள்வோம் ஞானபீடத்தின் ஆதீன கர்த்தர்களின் அருமையையும். பெருமையையும் போற்றி வாழ்த்துவோம். வாழ்த்துவது நாம் வாழ்வதற்கே

---

*இக்கட்டுரை 1978-ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற கோவிலூர் திருக்குட நன்னீராட்டு விழா மலரின் சில பகுதிகளின் தொகுப்பு.

நகரத்தார் நலம்பெற

முரு. நாராயணன்
அண்ணாமலைநகர்

இன்றைய நிலை:-

அன்று நகரத்தார் வாழ்ந்த முறை, இன்று வாழும் நிலை இவற்றை ஒப்பிடும்போது இன்றைய தலைமுறையினர் நம் இனத்தைப் பற்றி சற்று மறந்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டியதிருக்கிறது. பர்மா, மலேயா, இலங்கையிலே நம்மிடையே இருந்த ஒற்றுமை, சிக்கன வாழ்வு, பொருள் ஈட்டும் திறன் இவை எங்கே போயின என்று தெரிய வில்லை. இன்று நாம் தனித்து வாழ்கிறோம், நம்மாலும் நம் சமூகத்துக்கு தொண்டாற்ற முடியும் என்ற உறுதியை நினைவிற் கொள்ள வேண்டும். நமது வருங்கால சந்ததியாரின் வளமான வாழ்வுக்கு நல்ல பல வாய்ப்புகளை அமைத்துக்கொடுக்க வேண்டியது நமது கடமை யாகும்.

இளைஞர்கள், தொழில் மேதைகள், பெண்டிர். ஆகிய மூன்று பிரிவினரும் ஆற்ற வேண்டிய கடமைகள் பலப்பல. இளைஞர்கள் புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வேண்டும். முதலில் எத்தனை பெண்கள் பொருளாதாரத் தடை காரணமாக இன்னும் திருமண வாய்ப்பைப் பெறவில்லை, எத்தனை இளைஞர் களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற புள்ளி விவரங்களை எல்லாம் உடனடியாக எடுத்தாக வேண்டும். ஏழ்மை எத்தனை இளைஞர்களின் படிப்புக்கு இடையே நிற்கிறது என்பதையும்

நாம் அறிந்தாக வேண்டியுள்ளது. வரதட்சணை பெறமல் மணம் செய்து கொள்ள இளைஞர்கள் முன்வரவேண்டும்.

பெண்டிர் திருமணங்களையும் மற்ற வைபவங்களையும் சிக்கனமாக நடத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும். ஏன், புரட்சிகூட நடத்தி அனைத்து வைபவங்களையும் சிக்கனமாக நடத்த வேண்டும். பர்மாவும் பவனும் இனி எழுத்தில் தான் என்ற நிலையை அவர்கள் உணர்ந்து செயல்படவேண்டும்.

தொழில் மேதைகள் நம் இனத்து இளைஞர்களுக்கு வேலை கொடுத்து ஆதரிப்பதை ஒரு பெரிய இனப் பணியாகக் கருத வேண்டும். நம் பகுதியில் மீண்டும் இடிந்த கட்டிடங்கள் புதுப்பிக்கப்படவும் அங்குள்ள கோயில்களில் அறப் பணிகள் தொடரவும், வேலைபெற்ற இளைஞர்கள் பொருளுதவி செய்ய வேண்டும். இதற்கு அடிப்படையான வேலை வாய்ப்பினை நம் செல்வந்தர்கள் ஏற்படுத்தி இனத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும். வேலை கொடுத்த புனித இதயங்களை இளைஞர்கள் நடமாடும் தெய்வங்களாகக் கருதி தொழில் சிறக்க, வளம் கொழிக்க இரவு பகல் பாராது உழைத்து எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும். மேலும் பலர் வேலை பெறுவதற்கு வழி காட்டிகளாக நடக்கவேண்டும்.

நகரத்தார் சங்கங்கள் :

வட்ட அளவிலும் மாவட்ட அளவிலும் உடனடியாகச் சங்கங்கள் நிறுவப்படவேண்டும். இதில் ஒவ்வொரு நகரத்தாரும் அங்கம் வகிப்பதைப் பிறப்புரிமை எனவும், பிறவிப்பயன் எனவும் கருதவேண்டும். செயற்குழு பொதுக் குழு கூட்டங்களுக்கும் தவறாது வருகை தந்து சங்கம் சிறந்து விளங்க உறுதுணை புரிய வேண்டும். இச்சங்கங்கள் ஆண்டின் தொடக்கத்தில் பல திட்டங்களை வகுத்து ஆண்டு இறுதியில் சாதனைப் பட்டியலை வெளியிட வேண்டும். அனைத்து சங்கங்களும் அடிக்கடி தொடர்பு கொண்டு இன நலம் குறித்து விவாதிக்க வேண்டும். அரசுக்கும் நம் நகரத்தாருக்கும் இணைப்புப் பாலமாக இவை செயல் படவேண்டும். திருமண மண்டபங்களாகவும் வேலை வாய்ப்பு வங்கிகளாகவும் இவை விளங்கி பல ஏழைகளின் பிரச்சினைகள் தீர்க்க பாடுபடவேண்டும். ஒவ்வொரு சங்கமும் திருமணங்களை நடத்தியாக வேண்டும். சங்கங்கள் தங்கள் வருமானங்களைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநில மாநாடு நடத்தப்பட வேண்டும். இம் மாநாடு சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை, காரைக்குடி ஆகிய இடங்களில் நடத்தப்படலாம். இவை சிறப்பாக நடைபெறவும், சங்கம் வலுவாக செயல்படவும் மாநில பொறுப்பாளர்கள் மாவட்ட செயற்குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப் படவேண்டும். மாநில பொறுப்பாளர்கள், மாவட்ட, வட்ட, சங்கங்களுக்கு வழிகாட்டியாகச் செயல்பட வேண்டும்

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' எனவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு நம் இனம் பிற்படுத்தப்பட்ட இனமாகவும், சிறுபான்மை இனமாக அரசால் கருதப்பட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோமாக.

ஆழ்நிலை தியானமும் ஆன்மீக மறுமலர்ச்சியும்

பேராசிரியர் வீர. முத்துவீரப்பன்
ஓய்வு பெற்ற பேராசிரியர்
35, தேரடிப்பிள்ளையார்கோவில் தெரு, சிதம்பரம்

ஆழ்நிலை தியானத்தின் தோற்றம் :

மத்தியப்பிரதேசத்தில் ஜபல்பூர் மாவட்டத்தில் பிறந்து அலகாபாத் பல்கலைக்கழகத்தில் பி. எஸ்.சி பௌதிகம் படித்து ஆதி சங்கரர் பீடங்களில் ஒன்றுன ஜோதிர்மட பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ பிரும்மானந்த சரஸ்வதி அவர்களின் முக்கிய சீடராகி, இன்றும் உலக மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிவரும் மகரிஷி மகேஷ் யோகி அவர்கள் ஆழ்நிலைத்தியானத்தை உலகிற்குத் தந்திருக்கிருர். அவர்கள் ஆழ்நிலை தியானத்தை உலகிற்கு வழங்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியதே 1957ல் சென்னையில் தான். அன்று அவர் ஆரம்பித்த ''ஆன்மீக மறுமலர்ச்சி இயக்கம்'' இன்று பல நிலைகளில் பல பெயர்களில் உலகெங்கும் 108 நாடுகளில் 5000 மையங்கள் மூலம் சுமார் ஒரு கோடி மக்களுக்கு இதுவரை ஆழ்நிலை தியானத்தை பயிற்றுவித்து உலக அமைதிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் பணியாற்றி வருகிறது.

'ஆழ்நிலை தியானம்' என்ருல் என்ன ?

புறப்பொருட்களின் மேல் அலைகின்ற மேல் மனத்தை ஓர் ஒலி வாயிலாக அதாவது ஒரு மந்திரத்தின் வாயிலாக ஆழ்நிலைக்குக் கொண்டு சென்று மெய்யுணர்வு பெற வைப்பது ஆழ்நிலை தியானம் (Transcendental Meditation or T.M) என்று கூறலாம். மந்திரம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அமையாது. மந்திரத்தை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நேரிடை உரையாடல்மூலம் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் தேர்ந்தெடுத்து குருவணக்கத்திற்குப்பின் தருவார்கள். இத்தியானம் காலை 15-20 நிமிடங்கள், மாலை 15-20 நிமிடங்கள் செய்யப்படவேண்டும். குடும்பத்தினர், ஆண், பெண், இரு பாலரும் கற்றுக்கொள்ளலாம். ஐந்து தினங்களில் தினசரி $1\frac{1}{2}$ மணி நேரம் என தொடர்ந்து இத்தியானத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. புத்தகங்களைப்படித்து இத்தியானத்தை பயில இயலாது. கற்பவருக்கு முதல் நாளிலேயே ஒரு வித மன நிறைவும் தியானத்தில் பிடிப்பும் ஏற்படுகிறது.

ஆழ்நிலை தியானத்தின் குறிக்கோள் :

மனம் ஆனந்தத்தை நாடிச்செல்வது அதன் இயற்கை. உடல் தன் சோர்வையும், பதிவுகளையும், அழுத்தங்களையும், நரம்புமண்டல முடிச்சுகளையும் நீக்கிக்கொள்ள விழைவது அதன் இயற்கை. மனம் பேரானந்தத்தில் கலப்பதைத் தடுப்பது உடல்தான். தூக்கம் ஓரளவு ஓய்வைத்தான் உடலுக்குத் தருகிறது. மனம்-உடல் இவைகளில் ஓய்வைப் பெருக்கி அமைதி, தெளிவு ஏற்படுத்தி பேரானந்தப்பெருநிலையை எட்டுவது இத்தியானத்தின் குறிக்கோள்.

தியானத்தின் மையக்கருத்து :

தியானத்தின் மையக்கருத்து 'சிவனே' என்று இருப்பது. அதாவது சும்மா இருப்பது. சும்மா இருப்பது என்ருல் விழிப்பு நிலையில் சோம்பலாய் வெளிப்புற உணர்வுடன் இருப்பதல்ல. விழிப்பு நிலையில் ஆனுல் மனம் ஆழ்ந்த அமைதியில். இன்னும் சொல்லப் போனுல் மனதை எண்ணங்கடந்த நிலையில் (Transcendental Consciousness) ஒவ்வொரு பயிற்சி நேரத்தின்போதும் ஒரு சில விநாடிகளாவது இருக்கச்செய்து பழகுவது இத்தியானத்தின் மையக்கருத்தாகும். இது தூங்கும் நிலை அல்ல, தூங்காமல் தூங்கி சுகம்பெறும் நிலை இது. மந்திரமும் இல்லாத, மற்ற எண்ணங்களும் இல்லாத ஒரு புதுமையான நிலை. இந்த நிலையில் என்ன நேரிடுகிறது என்று பயிற்சி செய்பவர்கள் அந்நிலையில் அறியமுடியாது. ஆனுல் பேரானந்தப்பெருநிலையை எட்டிப்பிடித்த ஓர் உணர்வு பின்னர் உண்டாகும்.

தியானத்திற்குப் பின் ஏற்படும் விளைவுகள்:

பேரானந்தக்கலப்பின் விளைவுகள் நாள் தோறும் பயிற்சி செய்பவர்களுக்கு ஏற்படும். அப்போதைய மனம்-உடல் நிலைகளுக்கு ஏற்ப

தியானத்தில் முன்னேற்றம் ஏற்படும். அவரவர் பெற்ற அனுபவமே அவர்கள் தியான வளர்ச்சிக்கு சாட்சியாக அமையும்.

ஆழ்நிலை தியானமும் மற்ற தியானங்களும் :

ஆழ்நிலை தியானத்தில் எந்த முயற்சியும் கூடாது. இத்தியானத்தில் தூக்கத்தினும் பல மடங்கு ஓய்வை மனமும் உடலும் பெருக்கிக் கொள்ளுகின்றன. காரணம் மனத்தின் இயக்கம் தியானத்தின்போது படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதுதான். மனதைக்கட்டுப்படுத்தி செய்கின்ற தியானப்பயிற்சியும், மனம் ஒன்றைப்பற்றி சிந்தித்து செய்கின்ற தியானப் பயிற்சியும் தொன்றுதொட்டு நம் நாட்டில் கற்றுத்தரப்படும் தியானப்பயிற்சிகளே. அவைகளும் சமாதி நிலைக்கு இட்டுச்செல்லும். ஆனால் அவைகளின் பயிற்சி கடுமையாக இருக்கலாம். கட்டுப்பாடுகளும் அவைகளுக்கு உண்டு. சாதாரண மக்களுக்கு இந்தக்காலத்தின் துரிதப்போக்கிற்கு அவைகள் அவ்வளவு எளியது என்று கூற இயலாது. ஆழ்நிலை தியானம் எளிமையானது. ஆனால் செய்முறையைக் கற்றுக்கொள்வதில் கவனம் தேவை. செய்முறை நுணுக்கமானது என்றாலும் 9 வயதிற்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் கூட எளிதில் கற்றுக்கொண்டு விடுகிறார்கள். தியானத்தின் போது பல தரப்பட்ட எண்ணங்கள் குறுக்கிடும். அவைகள் நம் உடலில் உள்ள அழுத்தங்கள், பதிவுகள், நரம்பு மண்டல முடிச்சுக்கள் இவைகளைப் பொறுத்து தோன்றுபவைகள் ஆகும். அது இயற்கை என்று இத்தியானத்தில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. உடலைச்சமன் செய்து மனம் ஆழ்நிலைக்குச் செல்லுகிறது. எண்ணம் தோன்றும் இடத்திற்கு மனம் இட்டுச்செல்லப்படுகிறது. எண்ணம் தோன்றும் மன அடித்தளத்தைத் தாண்டுவதும் எளிமைதான். அது தானே நிகழ்கிறது. இத்தியானத்தில் கட்டுப்பாடுகளை வலியுறுத்துவதில்லை. உடலில், மனதில் தியானத்தின்போது கட்டுப்பாடு இருக்கக்கூடாது சுகமான நிலையில் உடலையும் மனத்தையும் வைத்துக்கொண்டு ஒரு ஆசனத்தின் பேரில் அமர்ந்து இந்த தியானம் உட்கார்ந்த நிலையில் செய்யப்படவேண்டும். இதில் சக்தி செலவில்லை. ஆனால் சக்தி கூடுகிறது. மனம் உடல் அமைதி தியானத்திற்குப் பின்னும் தொடர்கிறது. நமக்கு ஏற்படும் உள்ளுணர்வு பேரானந்தக்கலப்புடன் வளர்கிறது, பிறர் கட்டுப் பாடின்றி தன்னைத்தானே நல்வழியில் நடத்திச்செல்லச் செய்கிறது. இயற்கை நியதியை இத்தியானம் வளர்க்கிறது. இயற்கையும் பயிற்சி செய்பவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறது. கூடாப்பழக்கங்களைத் தானே விட்டுவிடும் குணம் வளர்கிறது. இது சமுதாயத்தை வளமுறச் செய்கிறது. ஓர் ஊரில் உள்ள மக்கட்தொகை P என்றால் $\sqrt{1\%P}$ மக்கள் இத்தியானம் செய்தால் அந்த ஊரில் நல்ல காரியங்கள் நிகழ்கின்றன. குற்றம் புரிவோரின் எண்ணிக்கை குறைகிறது.

மகரிஷியின் அசைக்க முடியாத நம்பிக்கை:

உலகின் மக்கட் தொகை Q என்றால் $\sqrt{1\%Q}$ மக்கள் இத்தியானத்தை தொடர்ந்து ஒரே இடத்தில் செய்தால் அணு அழிவிலிருந்தும், வன்முறைக்குற்றங்களிலிருந்தும், உலக நாடுகளிடையே ஏற்படும் போர் துன்பங்களிலிருந்தும் உலகை மீட்க முடியும் என்பது மகரிஷி மகேஷ் யோகி அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இதனை நேரில் மகரிஷியிடமிருந்து கேட்டறியும் அரிய வாய்ப்பு அடியேனுக்கு ஏற்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. 1986 ஏப்ரலில் புது டில்லியை அடுத்துள்ள மகரிஷி நகரில் மூன்று நாட்கள் தங்கி அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பிரதிநிதியாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இத்தியானப் பயிற்சியை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்கள் அடங்கிய கல்வியை துவக்குவது பற்றிய விபரங்களை சேகரிக்கும் வாய்ப்பு அடியேனுக்கு ஏற்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆழ்நிலை தியானத்தை அடிப்படையாகக் கொண்ட கல்விப்பணியை நன்முறையில் நடத்தி உலகிற்கு வழிகாட்டியாக அமையப்போகிறது என்று மகரிஷி அடியேனிடம் கூறியுள்ளார்கள். அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் இத்தியானப் பயிற்சி வகுப்பு இவ்வாண்டு துவக்கத்தில் மகரிஷி அவர்களின் ஆசியுடன் துணைவேந்தர் டாக்டர் S. V. சிட்டிபாபு அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பாடவகுப்புகளும் துவங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வாரமும் திங்கள் மாலை 5 மணிக்கு ஆங்கிலத்துறை அறை 10ல், ஆழ்நிலை தியான 5நாள் பயிற்சி வகுப்புகள் துவக்கி நடத்தப்படுகின்றன.

***ஆக்க அறிவு விஞ்ஞானம் (Science of creative Intelligence):**

இது இரண்டு பிரிவைக் கொண்டது. 1. அறிவைத் தருவதற்குரிய பாடப்பகுதி. 2. அனுபவத்தைக் கொடுக்கும் பயிற்சிப்பகுதி ஆக்க அறிவின் போக்கை பாடப்பகுதி விவரித்துச் செல்கின்றது. பயிற்சிப்பகுதி என்பது ஆழ்நிலை தியானத்தால் தனிமனிதன் பெறுகின்ற அனுபவத்தைக் குறிப்பது. எல்லாவித அறிவிற்கும் (பௌதிகம், இலக்கியம், பொருளாதாரம், சமயம் போன்றவைகள்) அடிப்படையானது ஆக்க அறிவு.

***ஆக்க அறிவின் குணங்கள்:**

1. ஆக்கஅறிவு எதனையும் முழுமையான கண்ணோட்டத்தில் பார்ப்பது, முழுமை பெறச் செய்கின்றது. 2. ஆக்க அறிவு முன்னேற்றத் தன்மை கொண்டது. 3. தன்னிறைவு பெற்றது 4. ஆக்க அறிவு ஒழுங்கானது; சரியான நுட்பத்திறன் கொண்டது. 5. ஆக்க அறிவு எண்ணக்கரு பிறக்கின்ற இடத்திற்குச் சென்று அங்கிருந்து செயலாற்றுகின்றது. 6. ஆக்க அறிவு எதனையும் பகுத்தறியும் போக்கைக் கொண்டது. பிரச்சினைகள் பலவீனத்தில் தான் தோன்றுகின்றன. எனவே பலவீனத்தை ஒழிக்கும்போது பிரச்சினைகளுக்கு எளிதாகத் தீர்வு காண முடிகின்றது. தியானத்தின் போது நாம் நமது அறிவு நிலையை, எண்ணங்கள் உற்பத்தியாகின்ற இடத்திற்கு கொண்டு செல்லுகின்றோம். எனவே உடலிலும் மனதிலும் ஏற்படும் அதிக சக்தியால் எல்லாப் பிரச்சினைகளையும் எளிதாகத் தீர்க்க முடிகின்றது. ஆக்க அறிவு விஞ்ஞானம் எல்லாப் பலவீனத்தையும்-துன்பங்களையும்-வாழ்விலிருந்து நீக்குகின்றது.

***ஆக்க அறிவுப் பயிற்சியின் பயன்கள்:**

1. மனம்-உடல் ஆழ்ந்த ஓய்வைப் பெறுகின்றது 2 மனம்-உடல் பெறுகின்ற ஆழ்ந்த ஓய்வால் அழுத்தங்கள் நீக்கப்படுகின்றன. 3. மனநோய்கள் நீங்குகின்றன. 4. நரம்பு மண்டலம் சீராக இயங்கும். 5. மனதுக்கு கிடைக்கின்ற அதிக சக்தியால் மனம் தெளிவாக வேலை செய்கின்றது. 6. மன நலம்-உடல் நலம் அதிகரிக்கின்றன 7. சமுதாய நடத்தையில் மாற்றம் ஏற்படுகின்றது. 8 நினைவாற்றல் அதிகரிக்கின்றது. 9. மூளை அலைகள் கோர்வையாக வேலை செய்கின்றன. 10. தன்னம்பிக்கை வளர்கின்றது. 11. மனம்-உடல் இணைந்து செயல்படுகின்ற போக்கு அதிகரிக்கின்றது. 12. ஓய்வில் விழிப்புணர்வு ஏற்படுகின்றது. 13. இரத்த அழுத்தம், இதயநோய், ஆஸ்துமா தலைவலி, தூக்கமின்மை நோய் நீங்குகின்றன. 14 தோலின் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. 15. சந்தேக மனப்பான்மை, நீங்குகின்றது. 16. நரம்புத் தளர்ச்சி குறைகின்றது. 17. ஆளுமைத்திறன் வளர்ச்சி அடைகின்றது. 18. பயம் நடுக்கம், உற்சாகமின்மை, கோபப்படுகின்ற போக்கு குறைகின்றது. 19. நட்பு மனப்பான்மை அதிகரிக்கின்றது. 20 மன எழுச்சி சமநிலை, ஏற்படுகின்றது. 21 தனிமனித அமைதி மூலம் உலக அமைதியைக்காண முடிகின்றது.

***அறிவியல் சான்றுகள்:**

அறிவியல் சான்றுகள் நிறைந்த 700 பக்கங்கள் கொண்ட இரண்டு ஆய்வுத் தொகுதி இத் தியானத்தின் சிறப்பை உலகம் முழுவதும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. வெளி நாட்டுப் பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களிலும் இதனைச் சேர்த்திருக்கின்றார்கள். தொடர்ந்து தியானம் செய்பவர்களின் உடல் நிலையிலும், மன நிலையிலும், மூளை அலைகளிலும் ஏற்படும் மாற்றங்களை அளந்து பார்க்க கருவி ஒன்று உள்ளது. அதன் மூலமும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தின்

---

*இப்பகுதிகள் "அறிவியல் சான்றுகள் நிறைந்த ஆழ்நிலை தியானம்" என்ற தலைப்பில் கு. கிருஷ்ணன் M.A; B.L.I.Sc; B.Ed (ஆழ்நிலை தியானப்பயிற்சி ஆசிரியர்) எழுதி மகரிஷி இயற்கை நியதிக் கல்லூரி (28, டாக்டர் குருசாமி சாலை,சேத்துப்பட்டு, சென்னை-600031) வெளியிட்டுள்ளபுத்தகத்திலிருந்து பெறப்பட்டவை.

மூலமும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன.

திருமூலர் கூற்று:

யோகத்தைப்பற்றி திருமூலர் கீழ்க்கண்டவாறு பாடியிருக்கிறுர்.

''இயம நியமமே எண்ணிலா ஆசனம்
நயமுறு பிராணுயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்கமாவது மாமே''

அட்டாங்க யோகத்தில் தியானம் ஏழாவதாகக் கூறப்படுகிறது. ஆழ்நிலை தியானத்தினுல் இயமத்தில் கூறப்படும் அஹிம்சை, உண்மை கள்ளாமை, பிறர்பொருள் விரும்பாமை, பிரமச்சரியம் என்ற அருங்குணங்கள் தானே வந்து நம்மை அடைகின்றன. மேலும் நியமத்தில் அடங்கிய தவம், சுத்தி, திருப்தி, ஞானநூல் ஆராய்ச்சி, ஈசுவர ஆராதனம், என்ற பழக்கங்கள் நமக்கு எளிதாகின்றன. எளிய சில ஆசனங்களும், எளிய பிராணுயாமமும் ஆழ்நிலை தியான ஆசிரியர்களிடம் கற்றுக்கொண்டு தியானத்தை வலுப்படுத்திக் கொள்கிறோம். படித்த-கேட்ட நல்ல கருத்துக்களை நாம் எளிமையாக மனதில் நிறுத்தி தாரணை செய்ய முடிகிறது. மனதை ஐம்புலன் வழி செல்ல விடாது தடுத்து ஒரு நிலைப்படுத்தி பிரத்தியாகாரம் பெற உதவுகிறது. இறுதியில் சமாதி நிலை நாம் அடையவும் இத்தியானம் வழிவகை செய்கிறது. குடும்பத்தினரும் இந்த எளிய தியானத்தின் மூலம் அட்டாங்கயோகம் பயில முடியும் என்பது மகரிஷியின் நம்பிக்கை. அமரர் பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரேசனுர் இந்த தியானம் கற்று மக்களிடையே அதனை பரப்பியது நாம் நினைவு கூறத்தக்கது. தியான முழுமைப்பயிற்சி (T. M. Sidhi) தியானம் மூன்று மாதம் செய்தவர்கள் கற்று தியானத்தின் பயன்களை விரைவில் பெறமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிறவியின் பயன்:

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அரிய மானிடப் பிறவிபெற்ற நாம் தியானம் கற்று, அன்ருட அலுவல்களை களைப் பின்றி செவ்வனே செய்து, வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டும். பிறவிப்பயனை நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டும்.

நாடு முழுதும் நகரத்தார் திருப்பணிகள்

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன், எம்.ஏ.,
அண்ணுமலைப்பல்கலைக்கழகம்

இந்தியத் திருநாட்டில் நல்லறங்கள் நாளும் செழித்திட ஒல்லும்வகை உதவும் இனம் நகரத்தார் இனம். பரந்து விரிந்த இந்தியத் துணைகண்டத்தில் காசி முதல் இராமேசுவரம் வரை பெரிய திருப்பணிகள் செய்து பேரும் புகழும் பெற்றவர்கள் நகரத்தார்கள்.

திரைகடலோடி திரவியம் குவித்தென திட்டமிட்ட வாழ்வால் திரட்டிய நிதிகளிலிருந்து திருப்பணிகள் பல செய்தனர். பெருங்கோவில்களை எழுப்பினர். ஆலயங்கள் அமைப்பதை வாழ்வு நெறியாகக் கொண்டனர். சேர சோழ பாண்டியருக்குப் பின்னர் மன்னர் பின்னேராகிய நகரத்தார்கள் மிகப் பெரிய அளவில் திருக்கோவில் பணிகளை செய்துள்ளார்கள். சோழர்காலம் போல பாண்டியர் காலம் எனக் குறிக்கப்படுவதுபோல நகரத்தார் காலம் என ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

இந்திய இனங்களில் நகரத்தார் இனம் குறிப்பிடத்தக்க இனம்; தென்னகத்தில் முக்கியமான இனம்; தமிழகத்தில் முதன்மையான இனமாக நகரத்தார் இனம் விளங்குகின்றது. செயல்களாலும் சாதனைகளாலும் சிறந்தோங்கி விளங்குகிறது. இறையுணர்வு இவர்கட்கு இயல்பு, தெய்வ நம்பிக்கை, நற்செயல்களுக்

கெல்லாம் ஊற்றுக்கண். எளிய வாழ்வும் உயர்ந்த நோக்கமும் உடையவர்கள் உயர்ந்த செயல்களால் உயர்ந்து வருகிறார்கள். தேச மெங்கும் திருப்பணி செய்த ஒரே இனம் நகரத்தார் இனமே. தெய்வத் திருப்பணிகளுக்கு கோடி கொடுத்த கொடைஞர் பலர்; வணிகத் தில் சிறந்து வளர்பொருள் ஈட்டும் நகரத்தார் ஈட்டிய பெருஞ்செல்வத்தை பேரறங்கள் செய்து, பெரும்புகழ் குவித்தனர். பெருஞ் செல்வர்களாதலால் பெருங்கோயில்களை எழுப்பு தலும், அவற்றைப் புரத்தலும் காத்தலும் பேணுதலும் இவர்களுக்கு எளிய செயலாயின 'ஈட்டுவதே பேரறம் செய்வதற்கென' என நினைத்தே ஈட்டினர். கடவுள் பணிக்கே கால மெல்லாம் தம்மை அர்ப்பணித்தனர். நாடு செழிக்க நல்லறங்கள் வளர்க்கும் திறத்தில் பாடல்பெற்ற திருத்தலங்களை சுவிகாரமாக ஏற்றனர். இன்றைய கிராம ஏற்புத்திட்டம் போல, தலங்கள் தோறும் கோயில்கள் கட்டி னர். நித்திய பூசை நிலையாக நடக்க, நிதி வழங்கினர். வரலாற்றுப் புகழ்மிக்க திருக் கோயில்களின் வடிவு சிதையும்போது திருப் பணியில் பெரிதும் ஈடுபட்டனர். திருப்பணி முடித்து குட நீராட்டிக் காணுதலில் கொள்ளை இன்பம் கண்டனர். கும்பாபிஷேகம் செய்து மகிழ்வதில் நகரத்தார் போன்ற இனத்தை இந்தியாவில் வேறெங்கும் காணமுடியாது. வேள்வி செய்வதுபோல, கரும சிரத்தையாய் முழு மூச்சுடன் குடமுழுக்கில் ஈடுபடுவர்.

திருக்கோயிலைச்சுற்றி பல்வகை அறங்கள் பாரில் வளர,வழிவகுத்தனர்.கோயிலுக்கு அணி கலன்களும் வாகனங்களும் வகைவகையாய் நல்கினர். கோயில் பூசகர்கட்கு இல்லம் அமைத் தனர். திருமடங்கள் கட்டி சிவநேயச் செல்வர் கள் தங்க, வாழ்வளித்தனர். நாள் வழிபாட் டிற்குப் பால் வழங்க, பசுமடங்கள் அமைத் தனர். பசு காத்து ஓம்பி பால்தர நிலையான நிதியமைத்தனர். பாலாபிஷேகத்தில் பரமனைக் கண்டு பரவசங் கொண்டனர். பூ எடுத்து பூசை செய்வதற்கு நந்தவனங்கள் கண்டனர், நாளும் நாண்மலர் தொடுத்த பணியாளர்க் கென பூக்கள் மலர சோலைகள் கண்டனர். பூக்கள் நிறைந்த காக்களை திருக்கோயில் சுற்றி அமைத்தனர். பூ வழிபாடே புனித வழி பாடெனப் போற்றினர். பூவினைச் சூடி, பாவினைப் பாடி மகிழ்ந்தனர்.

தெய்வ வழிபாட்டுத் திருமுறை ஓத திரு முறைபாடசாலைகளை நிறுவினர். கற்றறிந்த ஓதுவார்களைக் கொண்டு திருமுறைகளைக் கற்பித்தனர். நல் இளைஞர்களுக்கு நாளும் பயிற்சி நல்கினர். தேமதுரத் தமிழோசை திருக் கோயில் தோறும் முழங்கச் செய்தனர். ஆடல் நெறி, பாடல்நெறி ஆலயங்களில் செழிக்க அமைப்பு ஏற்படுத்தினர். இத்திருமுறை பாட சாலைகளே தமிழிசைக்கு ஊற்றுக்கண் ஆயின. தேசமெங்கும் தெய்வப்பணி செய்யும் இவர்கள் வேதாகம பாடசாலைகளையும் நிறுவி, வேத நெறி தழைக்கவும் மிகுசைவத் துறைகள் ஓங்கவும் வழி வகுத்தனர்.

திருவிளக்கு இடுதல் முதல் திருவிழாக்கள் வரை சிறிய செயலாயினும் பெரிய செயலா யினும் செய்வன திருந்தச் செய்தனர். தனித் தனி அறக்கட்டளைகள் நிறுவினர். ஒவ்வொரு செயலும் தட்டுப்பாடின்றி நடைபெற தனித்தனி நிதி அமைத்து அவை வளர வழி வகுத்தனர் தோன்றிய அறங்கள் துவளாமல் காப்பதைத் தமது அறமாகக் கொண்டனர். செய்த அறங்களைக் காப்பதைக் கண்ணினைக் காக்கும் இமையெனக் காத்தனர். திருக்கோயில் சொத்துக்களை வளர்த்தலன்றி, ஒருபொருளும் ஒருபோதும் துய்த்தலறியார். சிவன் சொத்து குல நாசம் எனக் கருதி திருநீரும் வீட்டிற்கு மிகுதியாகக் கொண்டு செல்லாத தூய இனம் நகரத்தார் இனம். தொண்டால் தூய வாழ் வால் திருநெறி போற்றிய திறத்தால் திரு வுடை இனமாக வாழ்கிறது. அதிவீரராம பாண்டியனின் தென்காசிக் கல்வெட்டு கூறுவது போல பழைய அறங்களைக் காப்பவர் பாதங் களைத் தன் தலைமேல் கொண்டனர்.

அடக்கமும் எளிமையும் இயல்பாகப் பெற்ற நகரத்தார் திருப்பணிகளின் சிகரத்தா ராய் விளங்குகிறார்கள். தொன்மைச் சிறப்பு மிக்க இந்திய மரபைக் காப்பதில் மறவர்களாக விளங்குகின்றனர். தேசங்கள் தோறும் சென்று திருக்கோயில் எழுப்புவதாலும் திருவிழாக்கள் எடுப்பதாலும் கோயில்களை வளர்ப்பதாலும்

தமிழ்ப்பண்பாட்டின் தூதுவர்களாகத் திகழ்கிறார்கள்.

நாளும் நல்லறம் செய்யும் பண்பு இரத்தத்தில் ஊறியிருக்க வேண்டும். தலைமுறை தலைமுறையாக நகரத்தார்கட்கு அறப்பண்பு குருதியோட்டத்தில் கலந்துள்ளது. திருக்கோயில் வழிபாடு வழிவழியாக இவர்கள் பெற்ற செல்வமாகும். அவற்றிற்குச் செலவழிக்க ஒருபோதும் தயங்கமாட்டார்கள். தியாக உணர்வினை நீண்ட நெடுங்காலமாக பரிந்தோம்பி காத்து வருகின்றனர்.

கோயில்களுக்காக எல்லாப் பொருட்களையும் தியாகம் செய்யும் இவர்கள் இயல்பினை எந்நாட்டாரும் போற்றி மகிழ்கின்றனர். நல்லறங்களைக் கட்டிக்காப்பதில் கடமையுணர்ச்சியும் பொறுப்பு உணர்ச்சியும் உள்ள இனமாக விளங்குகின்றது.

திட்டமிடுதல், காத்தல், வளர்த்தலில் வல்லமை மிக்க இனம் நகரத்தார் இனம். வாய்மையும் தூய்மையும் காப்பதிலும் வளர்பொருள் ஈட்டுவதிலும் வழங்குவதிலும் வல்லவர்கள். இத்தகைய நல்லியல்புகள் காலங்காலமாகப் பெற்ற இப்பேரினம், பேரறங்களைச் செய்து பெரிதும் மகிழ்ந்து வருகிறது. இவர்களது திருப்பணிகளைக் கருதி, கோவில் நாகரிகம் காக்கும் இனமெனத் துணிந்து கூறுவர். நல்லறம் செய்யும் நகரத்தார்களை கைகூப்பி நாளும் தொழுவோம்.

அறப்பணிக் கழகங்கள்

நம்மினத்தில் பொருளாதாரக் குறைவு காரணமாக திருமணமாகாது இருக்கும் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கவும், திருமணத்திற்கு நிதி உதவி செய்யவும் கீழ்க்கண்ட அறப்பணிக் கழகங்கள், அமைப்புகள் நம்மிடையே உள்ளன. விரும்புவோர் அவற்றை அணுகிப் பயன் பெறலாம்.

சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
127F, செக்காலை ரோடு, காரைக்குடி-623 001

பினாங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
127E, செக்காலை ரோடு, காரைக்குடி-623 001 (போன் : 2442)

பேரா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
127E, செக்காலை ரோடு, காரைக்குடி-623 001

ஈமவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
15, மார்த்தாண்டபுரம் முதல் வீதி புதுக்கோட்டை-622 001

ஸ்ரீ விசாலம் சாரிடபிள் டிரஸ்ட் & ஸ்ரீ அருணா சாரிடபிள் டிரஸ்ட்
7 117, ஒ. ஏ. தெரு, பள்ளத்தூர்-623 107 (போன் : செட்டிநாடு-72 & 108)

நகரத்தார் பெண்கள் திருமணக் கழகம், கதிரகம், காரைக்குடி-623 002

நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு, சென்னை-600 001

இவை தவிர பல நகரத்தார் சங்கங்களும் சில நகரக்கோயில்களும் நம் பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தும் திருமண நிதி உதவி அளித்தும் வருகின்றன.

நகரத்தார் சங்கங்கள் மற்றும் விடுதிகளின் முகவரிகள்

தொகுப்பு: அரு. இராமநாதன்

இராமநாதபுரம்

1 நகரத்தார் சங்கம்,
7-5-30 கீழரதவீதி,
சிவகாசி

2 நகரவிடுதி
தெற்குரதவீதி
இராமேஸ்வரம்

பசும்பொன் முத்துராமலிங்கம்

1 செயலாளர்
ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகர சத்திரம் மானேஜிங் சொசைட் டி
மேலமடம்
காரைக்குடி-623 001

2 நகரத்தார் சங்கம்
13, சத்தியமூர்த்தி தெரு
சிவகங்கை-623 560

3 செயலாளர்
நகரத்தார் சங்கம்
அழகாபுரி-623 561

4 தலைவர்
நகரத்தார் இளைஞர் முன்னேற்ற சங்கம்
ஆ. முத்துப்பட்டினம்
ஆத்தங்குடி

5 நகரத்தார் இளைஞர் வளர்ச்சிக்குழு
கண்டனூர்-623 104

புதுக்கோட்டை

1 நகரத்தார் சங்கம்
49, மார்த்தாண்டபுரம் முதல் தெரு,
புதுக்கோட்டை-622 001

திருச்சி

1 நகரத்தார் சங்கம்,
2, நத்தமால் தெரு,
திருச்சி-620 002

மதுரை

1 நகரத்தார் சங்கம்
25, வடக்கு சித்திரை வீதி
மதுரை-625 001

2 தலைவர்,
நகரத்தார் சங்கம்
18, சங்கிலித்தேவர்சந்து
பழனி-624 601

3 நகர விடுதி
இராக்கால மடம்
அடிவாரம்
பழனி-624 601

4 மதுரைநகரத்தார்
இளைஞர்சங்கம்
9, பந்தடி ஏழாம் தெரு
மதுரை-625 001

5 நகரவிடுதி,
தெப்பக்குளம் மேலத்தெரு,
திருப்பரங்குன்றம்-625 005

திருநெல்வேலி

1 நகரத்தார் சங்கம்
6, பேரறிஞர் அண்ணா மேற்குதெரு
திருநெல்வேலி-627 006

2 நகரவிடுதி,
125, சன்னதிதெரு,
திருச்செந்தூர்-628 213

3 நகரவிடுதி
கனகராயர் முடுக்குத்தெரு,
திருநெல்வேலி-627 006

கோவை

1 நகரத்தார் சங்கம்,
23-24, கௌலி பிரவுன்ரோடு,
ஆர். எஸ். புரம்
கோவை-641 002

2 நகரத்தார் சங்கம்
64, வாலிபாளையம் ரோடு
திருப்பூர்-638 601

3 தலைவர்
நகரத்தார் சங்கம்
12-C சாத்தூர்ரோடு
உடுமலைப்பேட்டை-642 126

4 நகரத்தார் சங்கம்
97, கடைத்தெரு
பொள்ளாச்சி-642 001

பெரியார்

1 நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்,
9, மண்டபம் ரோடு,
ஈரோடு-638 001

சேலம்

1 நகரத்தார் சங்கம்
25, கன்னரா தெரு
செவ்வாய்பேட்டை
சேலம்-636 002

2 சேலம் நகரத்தார் இளைஞர் சேவா சங்கம்,
139-A, முதல் அக்ரஹாரம்,
சேலம்-636 001

தஞ்சாவூர்

1 தலைவர்
மாயூரம் தாலுகா நகரத்தார் சங்கம்
நாராயணமெடிக்கல்ஸ்
15, நெம்பர் 2 ரோடு
மயிலாடுதுறை-609 001

2 நகரத்தார் அறப்பணிக்கழகம்,
75, காந்திரோடு,
மன்னார்குடி-614 001

3 தலைவர்
நகரத்தார்சங்கம்
13, காமாட்சி ஜோதிடர்தெரு,
கும்பகோணம்-612 001

4 நகரத்தார் சங்கம்
53/P-25 கிரிரோடு
ஸ்ரீநிவாசபுரம்
தஞ்சாவூர்-613 009

5 நகரத்தார் சங்கம்,
33, தலையாரி தெரு,
பட்டுக்கோட்டை-614 601

6 நகரத்தார் விடுதி,
காவிரிப்பூம்பட்டினம்,
பூம்புகார்-609 105

7 நகரவிடுதி
கீழவீதி
சுவாமிமலை-612 302

8 நகரவிடுதி
தெற்குரதவீதி
வைத்தீஸ்வரன்கோயில்-609 317

9 நகரவிடுதி
வெளிப்பாளையம்
நாகப்பட்டினம்-611 001

தென் ஆற்காடு

1 நகரத்தார்சங்கம்,
18-A, சங்கரநாயுடு தெரு,
கடலூர்-607 002

2 நகரத்தார்சங்கம்
20, மேலக்கோட்டை தெரு
விருத்தாசலம்-606 001

3 நகரத்தார் சங்கம்
1, சேர்மன் சண்முகம் தெரு
விழுப்புரம்-605 602

4 செயலாளர்
நெய்வேலி நகரத்தார்சங்கம்
48A பிளாக் 6
நெய்வேலி-607 803

5 சிதம்பரம் நகரத்தார்சங்கம்
35, தேரடிப்பிள்ளையார் கோவில்தெரு
சிதம்பரம்-608 001

6 நகரவிடுதி
120A, கீழவீதி **சிதம்பரம்-608 001**

வட ஆற்காடு

1 நகரத்தார்சங்கம்
29, ஏழாவது கிழக்குமெயின் ரோடு
வேலூர்-632 006

2 நகரத்தார் ஓயாமாரிமடம்,
திருவூடல் தெரு.
தெற்குவீதி,
திருவண்ணாமலை-606 601

3 நகரவிடுதி,
அடிவாரம்,
திருத்தணி-631 209

சென்னை

1 நகரத்தார் ஐக்கிய சங்கம்,
இரங்கூன் நகரவிடுதி
88, பவழக்காரத்தெரு,
சென்னை-600 001

2 ஆவடி நகரத்தார் சங்கம்
26/7 என். எம். ரோடு,
கிருஷ்ண நிலையம்
கன்னிகாபுரம், ஆவடி
சென்னை-600 054

3 அம்பத்தூர் நகரத்தார் மன்றம்
88-B கிருஷ்ண குமார்தெரு,
அம்பத்தூர்
சென்னை-600 053

4 காரைக்குடியார் நகரவிடுதி,
பவழக்காரத்தெரு,
சென்னை-600 001

5 தேவகோட்டையார் நகர விடுதி,
பவழக்காரத் தெரு,
சென்னை-600 001

மற்ற மாநிலங்கள்

கேரளம்

Rm. சோலையன்,
செயலர், தமிழ் சங்கம்,
9/413-B செருத்திசாலை
கள்ளிக்கோட்டை-673 001

கர்நாடகா

கர்நாடக மாநில நகரத்தார் சங்கம்
47, சவுத்என்ட் ரோடு
பசவன்குடி
பெங்களூர்–560 004

மகாராஷ்டிரா

1 தலைவர்
பம்பாய் தமிழ்சங்கம்
சைகான் ரோடு
பம்பாய்-20

2 நாட்டுக்கோட்டை நகரசத்திரம்
கார்த்திக் சுவாமிமந்திர்
ஷானி சௌக்
பஞ்சவடி
நாசிக்-422 003

உத்தரபிரதேசம்

1 நகரத்தார் சங்கம்
நாட்டுக்கோட்டை நகர சத்திரம்
கோதோவ்லியா
வாரணசி-221 001

2 நாட்டுக்கோட்டை நகரசத்திரம்
ஸ்ரீராம் மந்திர், பாபூபஜார்
அயோத்யா-224 123
பைசாபாத்

3 நாட்டுக்கோட்டை நகரசத்திரம்
149, மோரி தாராகஞ்ச்,
அலகாபாத்-211 006

பீஹார்

நாட்டுக்கோட்டை நகரசத்திரம்
171, சந்த் சௌரா
கயா-823 001

மேற்கு வங்காளம்

1 நகரத்தார் சங்கம்
34, எஜ்ராதெரு
கல்கத்தா-700 001

2 நகரமடம்
தாராகேஸ்வர் (கல்கத்தாவிற்கு அருகில்)

யூனியன் பிரதேசங்கள்

1 நகரத்தார் சங்கம்
4/18 WEA
கரோல்பாக்
புதுடில்லி-110 005

2 நகரத்தார் சங்கம்
47, ரீடா ராசபையர் தெரு
பாண்டிச்சேரி-605 001

தமிழக அரசின் பல்கலைக்கழக / கல்லூரி
நன்முதல்வர்/நல்லாசிரியர் விருது பெற்ற

டாக்டர் சுப. அண்ணாமலை
முதல்வர், தியாகராசர் கலைக்கல்லூரி, 1981—82
மதுரை.

டாக்டர் இராம. பெரியகருப்பன்
என்கிற தமிழண்ணல்
தமிழ்த்துறைத் தலைவர் 1981—82
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பேராசிரியர். இராம. சேதுநாராயணன்
முன்னை பொறியியல்புல முதல்வர், 1981—82
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வீர. முத்துவீரப்பன்
முன்னை இயந்திரப்பொறியியல்துறைத் தலைவர் 1983—84
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

ஆகிய நகரத்தார்

நால்வருக்கும்

சிதம்பரம் நகரத்தார் சங்கத்தின்

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்